PUBLIC LIBRARY

ISSN 1391-9504


# விஜய்

Vijey விஜய்

07.08.2013 - மலர் 10, இதழ் 23



## நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்





## அறிவுத்திறனில் தமிழ் மாணவி முதலிடம்!



# மின் கட்டணத்தைக் குறைப்பதற்கான வழிமுறைகள்!

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதாரண நபரான பிரதானி

இச்சந்தர்ப்பத்தில் பிலிமத்தலாவையின் அதிகாரங்கள் அனைத்தும் இறுதி நிலையை அடைந்தன. எனினும், முடிசூட்டிக்கொள்ளும் எதிர்பார்ப்பு மட்டும் குறையவில்லை. என்றோ ஒருநாள் தனது மகனுக்கேனும் முடிசூடும் சந்தர்ப்பம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் இருந்தான். கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனின் பேத்தியை தனது மகனுக்கு திருமணம் செய்து வைக்கும் யோசனையையும் முன்வைத்தான். அதனை அறிந்த ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் பெரிதும் கலவரம் அடைந்தான். தனது ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த சகல துரதிர்ஷ்டவசமான நிகழ்வுகளுக்கும் பிலிமத்தலாவையே தலைமை தாங்கியதாக மன்னன் பிலிமத்தலாவை மீது குற்றம் சுமத்தினான். அவனுக்கெதிராக விசாரணைகளையும் நடத்த எண்ணினான். இதன் பொருட்டு 'பெரும் வழக்கு' ஒன்றுக்கு சமுகமளிக்க வேண்டும் என கட்டளையிட்டு சகல பதவிகளிலும் இருந்து அவனை நீக்கி சிறையிலிட்டான்.

சிறிது காலத்தின் பின் மன்னன் அவனை மீண்டும் சிறையிலிருந்து விடுதலை செய்து சாதாரண மனிதனாக வாழ சந்தர்ப்பம் வழங்கினான். இதற்கு முன் பதவியிலிருந்து நீக்கப்பட்ட எந்தவொரு பிரதானியும் கண்டியில் வாழவில்லை. அவ்வாறு பதவி இறக்கப்பட்ட பிரதானியாக இருந்தால் உடனடியாக அவன் மரண தண்டனைக்கு உட்படுத்தப்படுவான். அவ்வாறு நிகழாவிட்டால் சாகும்வரை தமது கடமைகளைச் செய்ய அனுமதிக்கப்படுவான். பதவியிலிருந்து நீக்கப்பட்ட பிலிமத்தலாவையை கொலை செய்ய மன்னனுக்கு துணிவிருக்கவில்லை. அந்தளவிற்கு பெரும் அதிகாரம் படைத்த குடும்பமொன்றின் பகைமையை சம்பாதித்துக்கொள்ள அவன் விரும்பவில்லை. இதற்கிடையில் பிலிமத்தலாவை, மன்னனை கொலை செய்வதை நோக்கமாகக் கொண்டு அதற்கான நாளொன்றிற்காகக் காத்திருந்தான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தசமப்புள்ளி வேறுபாட்டினால் நீர்மூழ்கி நிகழ்ச்சித் திட்டம் பிற்போடப்பட்டது...!





S-80 ரக நீர்மூழ்கிக் கப்பலொன்று

ஐசக் பெரல்

எதிர்பாராத விதமாக சாதாரண நபர் ஒருவரின் செயற்பாடு, ஒரு நாட்டின் எதிர்காலத்தையே மாற்றி விட்ட சம்பவங்கள் வரலாற்றில் நிகழ்ந்ததுண்டு. அத்தகையதொரு சம்பவம் அண்மையில் ஸ்பெய்னில் நிகழ்ந்துள்ளது. பொறியிய லாளர் ஒருவர் செய்த ஒரு சிறிய தவறின் காரணமாக, ஸ்பெய்னின் பாரிய நிகழ்ச் சித் திட்டம் ஒன்றை முழு மையாக பிற்போடவேண் டிய துரதிர்ஷ்ட நிலைமை அந்நாட்டிற்கு ஏற்பட்டுள் ளது.

நவீன ரக நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றினை தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஸ்பெய்ன் மேற்கொண்டிருந்தது. அதற்குரிய அனைத்துப் பணிகளும் பூர்த்தியா கும் கட்டத்தில், அதன் நிறை 70 தொன்களினால் அதிகரித்துள் ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. பொறியியலாளர் ஒருவர் தசமப்புள்ளியினை தவறாகப் பயன்படுத்தியமையினாலேயே இத்தவறு நிகழ்ந் துள்ளது.

இத்தவறு இனங் காணப்படாமல் குறித்த நீர்மூழ்கிக் கப்பல் கடலுக் குக்குள் செலுத்தப் பட்டிருந்தால், அது மீண்டும் மேலே வராமல் அப்படியே நீரில் மூழ்கியிருக்கும் என்றே கூறப்படுகின்றது.



எனினும், அத்தகையதொரு சம்பவம் நிகழ்வதற்கு முன்னர் தவறு இனங்காணப்பட்டுள்ளமை நன்மையான விடயமாகவே உள்ளது. எவ்வாறாயினும், இத்தவறை மீண்டும் சரி செய்வ தற்கு இன்னும் 3 ஆண்டுகளே னும் தேவை என்றும் மேலதிகமாக 9 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்கள் அதற்குச் செலவாகும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

'ஐசக் பெரல்' (Isaac Peral) என்று பெயரிடப்பட்டுள்ள இந்த டீசல் மின்னாற்றல் நீர்மூழ்கிக் கப்பலுக்காக, ஸ்பெய்ன் நாடானது, 1.75 பில்லியன் ஸ்டேர்லிங் பவுண்களை செலவு செய்துள்ளது. எனினும், தற்போது ஏற்பட்டுள்ள தவறை சரிசெய்யும் பொருட்டு, ஸ்பெய்ன் பாதுகாப்பு அமைச்சானது, அமெரிக்க கடற்கொந்தராத்து நிறுவனமான 'இலக்ட்ரிக் போட்' நிறுவனத்திடம் 9 மில்லியன் பவுண்களை வழங்கி மூன்றாண்டு கால ஒப்பந்தமொன்றைச் செய்துள்ளது.

எவ்வாறாயினும், இந்த நீர்மூழ்கிக் கப்பலின் மிதக்கும் திறனை அதிகரிக்கும் முகமாக, கப்பலின் உடற்பகுதியின் நீளத்தினை 5-6 மீற்றரால் அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாக அதன் அதிகாரி ஒருவர் தெரிவித்துள் ளார். அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்;

"இந்த நிகழ்ச்சித் திட்டத்தினை விஸ்தரிக்கும் போது, எதிர்கொள்ளும் சவால்கள் கணிதரீதியிலான சிறிய தவறுகளைவிட அதிகமாக இருக்கக்கூடும். ராணுவ நிகழ்ச்சித் திட்டங்கள், குறிப்பாக நீர்மூழ்கி நிகழ்ச்சித் திட்டங்கள் தாமதமடைவது சாதாரண விடயமே ஆயினும், அதன் நிறையினைக் கணிப்பிடும் முறையில் ஆரம்பத்தில் யாரோ ஒருவர் தவறு செய்துவிட் டார். மீண்டும் அதனை எவரும் பரிசோதித்துப் பார்க்காததால், அத்தவறு தொடர்ந்துள்ளது" என்றார்.

## ஐசக் பெரல் நீர்மூழ்கிக் கப்பல்

19 ஆம் நூற்றாண்டில் ஸ்பெய்னில் வாழ்ந்த பொறியியலாளரும் நீர்மூழ்கிக் கப்பல் வடிவமைப்பாளருமான ஐசக் பெரல் என்பவரின் பெயரையே இந்த நீர்மூழ்கிக் கப்பலுக்குச் சூட்டியுள்ளனர். 233 அடி நீளம் கொண்ட இதில், 30 பேர் பயணிக்க முடியும். விசேட செயலணிக் குழு வீரர்கள் எட்டுப் பேர் இதில் பயணிக்கலாம். கடலின் மேற்பகுதியில் மற்றும் ஆழ்கடலில் நிகழும் யுத்தங்களின்போது தேவைப்படும் ஆயுதங்களை இதில் களஞ்சியப்படுத்திப் பாதுகாப்பாக வைக்க முடியும் என்பதும் இதன் விசேட அம்சமாக உள்ளது.

கவிதா

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey@Wijeya.lk

வாசகர் முகம்



International Language Centre
வழங்கும்
இலவச தபால் மூல ஆங்கில பாடநெறி.
சர்வதேச பாஷை மத்திய நிலையம் அகில இலங்கை ரீதியில் 10000 தமிழ் பேசும் மாணவர்களுக்கு வீட்டி-லிருந்தே ஆங்கிலம் கற்க கூடிய டிப்ளோமா பாடநெறி ஒன்றை இலவசமாக அறிமுகம் செய்கிறது.
- வயது எல்லை இல்லை.
- இலங்கையின் எப் பாகத்தில் இருந்தும் கற்கலாம்.
- பாடசாலை மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.
பெயர்களை பதிவு செய்ய பின்வருமாறு SMS ஒன்றை அனுப்பவும்.
VJ - இடைவெளி உங்கள் பெயர், முகவரி, வயது.
SMS - செய்யுங்கள். 0777- 280 834
அல்லது தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள்.
INTERNATIONAL LANGUAGE CENTRE
P. O.Box.119, # 317/a D.S.Senanayake st, Kandy.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இயந்திர முதலைகள்



## அதிசயக் கிரகமும் அப்பாவிச் சிறுவர்களும்.....




பன்-பாலா

இதுவரை....

ஜப்பானிய விஞ்ஞானியிடம் இருந்து அனைவரையும் அஷ்வின் காப்பாற்றியதன் பின்னர் அவரது கதிர்வீச்சு துப்பாக்கியை பிரியன் எடுத்துக்கொண்டான். இராமபுத்திரன் செய்வதறியாது சிறுவர்களுடன் நடந்துகொண்டிருக்கும்போது திடீரென அஷ்வினைக் காணவில்லை.

இனி...

"அஷ்வினுக்கு என்னாயிற்று" என்று பிரியன் பதற்றத்துடன் கேட்டான்.

"நான் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்.....!" என்று இராமபுத்திரன் கூறிவிட்டு அங்கிருந்து விரைந்தார்.

"நில்லுங்கள்! நாங்களும் உங்களுடன் வருகிறோம்" என்று பின்தொடர்ந்தார்கள் இருவரும்.

திடீரென.... இதுவரை ஸ்தம்பித நிலையில் இருந்த ரொபோக்கள் இயங்க ஆரம்பித்தன. இதனால், திடீர் பரபரப்பு ஏற்பட்டது. இராமபுத்திரன் திடுக்கிட்டார். இந்த ரொபோக்களுக்கு இயங்கும் கட்டளையை இட்டது யார்? என யோசித்தவாறே பரிதாபமாக விழிக்கலானார். எங்கிருந்தோ அஷ்வினின் குரல், "சுதன்,....... பிரியன் இரண்டு பேரும் விமானத்துக்குப் போங்கள். நான் வருகிறேன்" என்று கேட்டது.

இதைக்கேட்டதும் இராமபுத்திரனுக்கு 'திக்' கென்றது. 'இவனுக்கு இவ்வளவு நம்பிக்கை எப்படி வந்திருக்கும்?'

"அங்கிள்! இப்போது என்ன செய்வது?" என்று சுதன் கேட்டான்.

"அஷ்வின் சொல்வதுபோல் விமானத்திற்குப் போவோம்" நம்பிக்கையின்றிக் கூறினார் இராமபுத்திரன். அவரால் இப்போது எந்தவொரு தீர்மானத்துக்கும் வர முடியவில்லை. அதேநேரம் அவரது உள்மனம் எச்சரித்தது. 'அஷ்வின் உள்ளே இருப்பது ஆபத்து'

சில விநாடிகள் மௌனித்து நடந்தவாறே யோசித்தார். 'விமானத்தில் நீங்கள் காத்திருக்கப் போகிறீர்களா? ஏற்கனவே பாதுகாப்பு நிலைகளுக்கு எச்சரிக்கைத் தகவலை நான் அனுப்பிவிட்டேன். உங்கள் மூவரையும் பந்தாட அனைத்து இயந்திரங்களும் தயாராக இருக்கும் நீங்கள் வெளியேறித்தான் பாருங்களேன்.....!' என மனசுக்குள்ளாகவே கிரகித்துச் சிரித்துக் கொண்டார் இராமபுத்திரன்.

அவர்கள் தலைமையகத்தை விட்டு வெளியே வந்தார்கள். பரந்தவெளி. பச்சைப் பசேல் என்ற புல்வெளித் தரை. ஆங்காங்கே பாதுகாப்பு ரொபோக்கள். வானவீதியில் 'கர்....புர்....' என்ற சத்தத்தோடு இயந்திர வௌவால்கள். அகழி நீர் ஆகக் கூடுதல் பாகை வெப்பத்தோடு பொன்னிறமாக மினுமினுத்தது. அத்தனையும் அக்கினித் துளிகள். இயந்திர முதலைகள் வாயைப் பிளந்து கொண்டு காத்திருந்தன.

சுதனுக்கும் பிரியனுக்கும் இனம்புரியாத பீதி உருவானது. இராமபுத்திரன் கையிலிருந்த தொலைஇயக்கியை முடுக்கிவிட்டார். சத்தம் ஏதுமின்றி அகழிக்குக் குறுக்காக திடீர்ப் பாலம் ஒன்று தோன்றியது. தரைப்பகுதியை அது இணைத்தது.

வாய்விட்டுச் சிரித்தார் இராமபுத்திரன். திடீரென அவர் அவ்வாறு சிரித்தமை சிறுவர்கள் இருவருக்கும் அச்சத்தை ஏற்படுத்தியது.

"அங்கிள்! இந்தப் பாலம் வழியாகத்தான் போகவேண்டுமா?" என்று பரிதாபமாகக் கேட்டான் பிரியன்.

"ஆமாம்" என்றவாறு நடந்துகொண்டிருந்தார் இராமபுத்திரன். அதேநேரம் அஷ்வின் பற்றியே அவர்கள் இருவரும் நினைத்துக் கொண்டிருந்தார்கள்.

விழிகளை அகல விரித்தபடி அடிமேல் அடியெடுத்து வைத்து எச்சரிக்கையாக நடந்தார்கள். முன்னால் எவ்வித அலட்டலுமின்றிக் கம்பீரமாக நடந்து கொண்டிருந்தார் இராமபுத்திரன். அவர்கள் பாலத்தை அடைந்தபோது, இயந்திர முதலைகள் விநோத இரைச்சலுடன் கொதிநீரில் சுழன்று கொட்டமடித்துக்கொண்டிருந்தன. இயந்திர முதலைகளின் மின் கண்கள் சுதன், பிரியன் இருவரையுமே வட்டமடிப்பதுபோல சுற்றின. இராமபுத்திரன் முகத்தில் இளநகை. இந்த முதலைகள் இவர்கள் இருவரையும் விழுங்கப் போகும் காட்சியைக் காண அவர் தயாரானார்.

(தொடரும்)

# பலன்



அமுதனின் தாய் ஒவ்வொரு நாளும் ஒரு பிச்சைக்காரனுக்கு உணவு அளித்த பின்னர்தான் தான் உணவு உண்பார். இதைக் கவனித்த அமுதன், "அம்மா! நாமோ வறுமையில் வாடுகிறோம். இந்த நிலைமையில் ஒவ்வொரு நாளும் பிச்சைக்காரனுக்கு உணவு கொடுக்க வேண்டுமா? இதனால், நமக்கு என்ன நன்மை?" என்று கேட்டான்.

"மகனே! 'ஐயமிட்டு உண்' என்பது பெரியோர் மொழி. அதை நான் பின்பற்றி வருகிறேன். அதனால், என்ன நன்மைகள் கிடைக்கும் என்பது எனக்குத் தெரியாது" என்றார் அமுதனின் தாய். "சரி அம்மா! நான் இந்த அன்னதானத்தின் பலனைத் தெரிந்துகொண்டு வருகிறேன்" என்று அங்கிருந்து புறப்பட்டான் அமுதன்.

அடர்ந்த காட்டு வழியாக சென்றுகொண்டிருந்தபோது, இருள் சூழத் தொடங்கியது. கொடிய விலங்குகளின் உறுமல் கேட்டது. தன் உயிர் போகப் போகிறது என்று நடுங்கியவாறு இருந்தான் அமுதன். அப்போது அங்கே வந்த வேடன் ஒருவன் அவன்மீது இரக்கம் கொண்டு "சிறுவனே! இரவில் இங்கே இருப்பது ஆபத்து. என்னுடன் வந்து பரணில் தங்கிவிட்டுக் காலையில் செல்" என்றான்.

அவன் பெரிய மரம் ஒன்றில் கட்டப்பட்டிருந்த பரணுக்கு அமுதனை அழைத்துச் சென்றான். அங்கே இருந்த அவன் மனைவி, "நம் இருவருக்கே இங்கே சாப்பிட உணவு இல்லை; தங்கவும் இடமில்லை. இந்த நிலையில் சிறுவன் ஒருவனை அழைத்து வரலாமா?" என்று கோபத்துடன் கத்தினாள். அந்த வேடனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அவன் தன் மனைவியைப் பார்த்து, "உன் உணவில் எதுவும் இவனுக்குக் கொடுக்க வேண்டாம். உன் இடத்திலும் பங்கு தர வேண்டாம். என் சாப்பாட்டைக் கொடுத்து பரணில் என் இடத்தில் இவனைப் படுக்க வைக்கிறேன்" என்றான்.

"சரி ஏதாவது செய்யுங்கள்" என்று எரிச்சலுடன் சொன்னாள் அவள். வேடனும் அவன் உணவில் ஒரு பகுதியை அமுதனிடம் கொடுத்தான். பரணில் உள்ளே அமுதனைப் படுக்க வைத்துவிட்டு, ஓரமாகத் தானும் படுத்துக்கொண்டான். நள்ளிரவில் பரணில் இருந்து தவறி கீழே விழுந்த வேடனை அங்கே உலாவிய விலங்குகள் கொன்று தின்றன.

காலையில் விழித்தாள் வேடுவிச்சி, கணவன் இறந்ததை அறிந்து, அழுது புலம்பினாள். அமுதனும் நடந்ததை அறிந்து வருத்தத்துடன் அங்கிருந்து புறப்பட்டான், அவன் தொலைதூரம் நடந்து சென்று தவம் செய்துகொண்டிருந்த முனிவர் ஒருவரைப் பார்த்தான். அவரைப் பணிவாக வணங்கினான். அவரும் கண் திறந்து அவனைப் பார்த்தார்.

"அன்னதானத்தின் பலனைத் தெரிந்துகொள்ள வந்துள்ளேன். அதனால், என்ன பலன் கிடைக்கும்?" என்று கேட்டான் அமுதன்.

முனிவரும் "பக்கத்து நாட்டு அரசருக்கு ஆண் குழந்தை ஒன்று பிறக்கப் போகிறது. அந்தக் குழந்தையிடம் அன்னதானத்தின் பலன் என்ன என்று கேள். அது சொல்லும்" என்றார். அங்கிருந்து புறப்பட்ட அமுதன், பக்கத்து நாட்டை அடைந்தான். அரண்மனை சென்று அரசரைப் பணிவுடன் வணங்கினான்.

"அரசே! உங்களுக்கு ஆண் குழந்தை ஒன்று பிறக்கப் போகிறது. குழந்தை பிறந்ததும் அதை என்னிடம் எடுத்து வாருங்கள்." என்றான்.

"மகிழ்ச்சி அடைந்த அரசன், அப்படியே செய்கிறேன்" என்று கூறி அரண்மனையில் அமுதனைத் தங்கும்படி வேண்டினான்.

நாளடைவில் அரசிக்கும் ஆண் குழந்தை பிறந்தது. பச்சிளம் குழந்தையை அமுதன் முன் கொண்டு வந்து வைத்தனர். குழந்தையைப் பார்த்த அமுதன், "இளவரசே! அன்னதானத்தின் பலனைச் சொல்லுங்கள்" என்று கேட்டான். குழந்தை வாய் திறந்து, "சிறுவனே! காட்டில் உனக்கு உணவு அளித்த வேடன்தான் நான். உனக்கு உணவு அளித்த புண்ணியத்தால், இளவரசனாகப் பிறந்துள்ளேன். நாள்தோறும் ஐயமிட்டு உண்கின்ற உன் தாய்க்கு என்ன பேறு கிடைக்கும் என்பதை நீயே கற்பனை செய்து பார்" என்று பதில் சொன்னது. அதன்பின்னர் குழந்தை ஒன்றுமே பேசவில்லை. வீடு திரும்பிய அவன் நடந்ததை எல்லாம் தன் தாயிடம் கூறினான். "அம்மா! நாம் இனி ஒவ்வொரு நாளும் ஏழைகளுக்கு உணவிட்ட பின்னரே உண்போம்" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தானியாவின் அறிவுத்திறன் போட்டியில் தமிழ் மாணவி முதலிடம்





தாய் சுஜாவுடன் ஸ்ரீநிதி

பிரித்தானியாவில் நடைபெற்ற சிறுவர்களுக்கான அறிவுத்திறன் போட்டியில் இந்திய தமிழ்நாட்டைச் சேர்ந்த 11 வயதுடைய தமிழ்ச் சிறுமி ஸ்ரீநிதி பிரகாஷ் முதலிடம் பெற்றுள்ளார்.

பிரித்தானியாவின் சேனல்-4 மற்றும் மென்சா அமைப்பு இணைந்து புத்திசாலிக் குழந்தையைத் தெரிவு செய்யும் போட்டியை நடத்தியது. இதில் 8 வயது முதல் 11 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் கலந்துகொண்டனர். ஆண்டுதோறும் நடத்தப்படும் இந்தப் போட்டியில், இந்த ஆண்டு 2,000 பேர் கலந்துகொண்டனர். இந்தப் போட்டி ஆரம்பத்தில் மனக்கணிதம், விவாதம், தர்க்கவியல் (Logic), Spelling மற்றும் பொது அறிவு என நான்கு சுற்றுகளாக நடத்தப்பட்டு, அதன் இறுதிப் போட்டிக்கு 21 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இறுதிப் போட்டியில் ஸ்ரீநிதி முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

ஸ்ரீநிதியின் அறிவுத் திறன் பற்றி அவரது தாய் சுஜா கருத்துத் தெரிவிக்கையில்; ''ஸ்ரீநிதி இயற்கையிலேயே புத்திசாலிக் குழந்தைதான். இந்தப் போட்டியில் வெல்வதற்காக கடுமையான பயிற்சிகள் எதையும் அவருக்கு நாங்கள் அளிக்கவில்லை. மூன்று வயதாக இருக்கும் போதே, பல்வேறு நாட்டின் கொடிகளைப் பார்த்தவுடன், அவற்றின் பெயரைக் கூறும் திறன் படைத்தவராக ஸ்ரீநிதி விளங்கினார். சிறு வயதில் இருந்தே போட்டிகளில் கலந்துகொள்வதில் ஸ்ரீநிதி ஆர்வங் காட்டினார்'' என்றார்.

புத்திசாலிக் குழந்தையாகத் தெரிவாகியிருக்கும் ஸ்ரீநிதியின் திறமையைக் கண்டு வியந்துள்ள பிபிசியின் வணிகபீட ஆசிரியர் ரொபர்ட் பெஸ்டன், தன்னை சந்திக்க வருமாறு ஸ்ரீநிதிக்கு அழைப்பு விடுத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.




## நல்லதும் கெட்டதும்...




வாயை மறைக்காமல் தும்மாதீர்கள்!

இவ்வாறு வாயை மறைத்துத் தும்முங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்மானியை மெ
# மின் கட்டணத்தை



அன்றாட வாழ்க்கையில் மின்சாரம் இன்றியமையாத ஒரு விடயமாகிவிட்டது. மின்சாரத்தினை சிக்கனமாகப் பயன்படுத்தும் போது, மின் கட்டணத்தினைப் பெருமளவில் குறைத்துக்கொள்ள முடியும். அதேவேளை, சிக்கனமாக மின்சாரத்தினைப் பயன்படுத்துவதும் மின் நெருக்கடிக்குத் தீர்வாக அமையும். இதனால், சுற்றாடலும் பாதுகாக்கப்படுகின்றது. ஆகவே, வீட்டில் உள்ள மின் சாதனங்களைக் கவனமாகக் கையாள்வதனூடாக, எப்படி மின் கட்டணத்தினைக் குறைக்கலாம் என்பதனை இங்கு பார்ப்போம்.











### குளிர்சாதனப்பெட்டி

- நீங்கள் கொள்வனவு செய்யும் குளிர்சாதனப்பெட்டி, வீட்டு உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்புடையதா என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்.
- பழங்கள், மரக்கறிகளை வைக்கும்போது, துரிதகதியில் வெளியே எடுக்கக்கூடியவாறு வையுங்கள்.
- மரக்கறிகள் மற்றும் கீரைவகைகளை குளிர்சாதனப்பெட்டியில் வைக்கும்போது, பேப்பர் அல்லது பொலித்தீன் பைகளில் சுற்றி வையுங்கள்.
- கருவாடுகளையும் சீனியையும் குளிர்சாதனப்பெட்டியில் வைக்காதீர்கள்.
- தேவைக்கு மேலதிகமாக குளிர்நீர்ப் போத்தல்களை குளிர்சாதனப்பெட்டியில் வைக்காதீர்கள்.
- குளிர்சாதனப்பெட்டியின் கதவுகளை அடிக்கடி திறந்து- மூடாதீர்கள்.
- சூடான உணவுகளை வைக்காதீர்கள்.
- குளிர்சாதனப்பெட்டியினுள் வெப்பநிலையை தேவைக்கு ஏற்ப கட்டுப்படுத்துங்கள்.

### உணவு சமைக்கும்போது....
**(Rice Cooker, Hot Plate, Electric Oven போன்றவை)**

- உணவு வகைகளை அவிக்கும்போது தேவையான அளவு நீரை இடுங்கள்.
- சமைக்கும்போது அதிக நேரம் தேவைப்படும் உணவுகளை முதலில் சமையுங்கள். இரண்டாவதாக குறுகிய நேரத்தில் சமைக்கக்கூடிய உணவுகளை சமையுங்கள்.
- உணவு வகைகளை அவிக்கும்போது பாத்திரத்தினை மூடிவிடுங்கள்.
- பச்சையாக சாப்பிடக்கூடியவற்றை அப்படியே சாப்பிடுங்கள்.
- தேவையற்ற விதத்தில் உணவுகளை அவிப்பதனால், மின்சார விரயம் ஏற்படுவதைத் தவிருங்கள்.




### மின் அழுத்தி

- பல நாட்களுக்குத் தேவையான உடைகளை ஒரே நாளில் அயன்செய்துவிடுங்கள்.
- கடினமான துணிகளை முதலில் அயன் செய்யுங்கள். அதன்பின் வெப்பத்தைக் கட்டுப்படுத்திவிட்டு இதர உடைகளை அயன் செய்யுங்கள்.
- தானியங்கி வெப்பக் கட்டுப்பாட்டு மின் அழுத்திகளின் பாவனை பொருத்தமானது.
- அயன் செய்யும் பலகையின்கீழ் மெல்லிய அலுமினியத் தாளை வைப்பதனால், உடையின் இருபுறமும் ஒரே தடவையில் அயன் செய்யப்படும்.
- ஈரமான துணிகளை அயன் செய்யாதீர்கள்.




### சலவை இயந்திரம்


- அன்றாட உடைகளை அன்றே கழுவிக்கொள்ளுங்கள்.
- வீட்டிற்குப் பொருத்தமான சலவை இயந்திரத்தினைக் கொள்வனவு செய்யுங்கள்.
- உடைகளைக் கழுவுவதற்கு அனுமதிக்கப்பட்ட நிறைக்கு மேலதிகமாகவோ, குறைவாகவோ இயந்திரத்தில் உடைகளைப் போடாதீர்கள்.
- சலவை இயந்திரத்தில் உடைகளைக் கழுவுவதாயின், சில நாட்களுக்கு உடைகளை சேர்த்து வைத்து ஒரே நேரத்தில் கழுவிடுங்கள்.
- சலவை இயந்திரத்தில் உள்ள உலர்த்தியைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, கைகளினால் உடைகளைப் பிழிந்து உலரவிடுங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...துவாக சுழலச்செய்து
# ...நக் குறைத்திடுவோம்










திக்... வக்க இயலுமானவரை விறகு
ளப் பயனபடுத்துங்கள்.
லையைப் (ஹீற்றர்) பயன்படுத்தி
கவைப்பதாயின், தேவைக்கு மட்டுமே
திக்க வையுங்கள்.
வைத்த நீரை மீளப் பயன்படுத்த
கில் ஊற்றி வையுங்கள்.

## தொலைக்காட்சி

- ரிமோட்டினால் தொலைக்காட்சியின் இயக்கத்தினை நிறுத்துவதற்குப் பதிலாக, தொலைக்காட்சியின் ஸ்விட்ச்சை அழுத்தி, அதன் இயக்கத்தை நிறுத்திவிடுங்கள்.
- தொலைக்காட்சியினை Standby நிலையில் வைப்பதனைத் தவிருங்கள். Standby நிலையில் வைக்கும்போது, மேலதிகமாக மின்சாரம் விரயமாகும்.
- தொலைக்காட்சி பார்க்கும்போது, வீட்டில் உள்ள இதர மின்குமிழ்களை அணைத்துவிடுங்கள்.

## மின்விசிறி

- வீட்டில் இருக்கும்போது, இயற்கையாகக் காற்று வரும் வகையில், ஜன்னல்களைத் திறந்து வையுங்கள்.
- சீலிங் மின்விசிறிக்குப் பதிலாக மேசை மின்விசிறியைப் பயன்படுத்துங்கள்.
- தேவையின்றி மின்விசிறியை சுழல விடாதீர்கள். தேவையற்றபோது மின்விசிறிகளை நிறுத்திவிடுங்கள்.










## வெளிச்சத்தைப் பெறும்போது....

- சாதாரண மின்குமிழ்களுக்குப் பதிலாக, CFL மின்குமிழ்களைப் பயன்படுத்துங்கள். இவை தவிர, மிகவும் குறைவான மின் பாவனையைக்கொண்ட LED மின்குமிழ்களும் தற்போது விற்பனையில் உள்ளன.
- உங்கள் தேவைக்கு ஏற்ப மின்குமிழ்களை எரியச் செய்து, ஏனையவற்றை அணைத்துவிடுங்கள்.
- அந்தந்த இடத்திற்குப் பொருத்தமான மின்குமிழைப் பயன்படுத்துங்கள். குளியல் அறையில் குறைவான வெளிச்சம் தரக்கூடிய மின்குமிழ்கள் பொருத்தமானது.
- வீட்டுச் சுவர்களுக்கு மெல்லிய நிறம்கொண்ட நிறப்பூச்சைப் பயன்படுத்துங்கள். இதனால், வெளிச்சம் சுவரில் பட்டு தெறிப்படைந்து, அதிக வெளிச்சம் அறைக்கு கிடைக்கும்.
- மாதத்திற்கு ஒருமுறையாவது மின்குமிழ்களில் தூசுகளை துடைத்து சுத்தப்படுத்துங்கள்.




பிரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - II (சென்றவாரத் தொடர்ச்சி)

பெயர்: ..................................................... நேரம்: 45 நிமிடங்கள்

33) பென்சில் தயாரிக்கப் பயன்படும் மூலப்பொருள் எது?

1. செப்பு 2. காரீயம் 3. உருக்கு

34) தேசியகீதத்தை தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?

1. சோமசுந்தரப் புலவர்
2. சேர்.பொன்னம்பலம்
3. மு.நல்லதம்பி

35) பங்குனி மாதம் 10 ஆம் திகதி பூரணை தினமாகும். எனின், அடுத்த பூரணை தினம் மீண்டும் எப்போது வரும்?

1. சித்திரை 10 2. பங்குனி 31 3. சித்திரை 8

36) பாலில் இருந்து தயாரிக்க முடியாத உணவுப் பொருள்;

1. தயிர், சீஸ் 2. நல்லெண்ணெய், மாஜரின் 3. சீஸ், மோர்

37) பின்வருவனவற்றுள் புற்று அமைக்கும் பிராணி எது?

1. பாம்பு 2. எலி 3. கறையான்

38) எமது புலன் அங்கங்களின் எண்ணிக்கை யாது?


1. 3 2. 4 3. 5

39)  இப்பாதத்தைக் கொண்ட பிராணி எது?

1. புலி 2. சிங்கம் 3. கரடி

40) உணவிற்குப் பயன்படும் வேர் உணவு எது?

1. மரவள்ளி 2. கெரட் 3. வல்லாரை


A


B


C


D

**மேலுள்ள படத்தில் காணப்படும் தாவரங்களை அவதானித்து, பின்வரும் வினாக்கள் மூன்றுக்கும் விடை தருக.**

41) பச்சையாக உண்ணக்கூடிய உணவுத் தாவரம் எது?

1. A 2. B 3. D

42) தொற்றுநீக்கியாகப் பயன்படும் தாவரம் எது?

1. B 2. C 3. A

43) காற்றால் பரவும் தாவரம் எது?

1. B 2. D 3. C

44)  இப்படத்தில் இருக்கின்ற பிரசித்தி பெற்ற நபர் யார்?

1. ஆனந்தகுமாரசாமி 2. குணசிங்க 3. பொன்னம்பலம்

45) புனித வெள்ளரசு மரம் காணப்படும் நகரம் எது?

1. பொலன்னறுவை 2. அனுராதபுரம் 3. கண்டி




46)  படத்தில் காணப்படும் பூச்சியின் பெயர் யாது?

1. கரப்பான் 2. வெட்டுக்கிளி 3. தும்பி

47) இலங்கையில் மூவின மக்களும் வழிபடும் தலம் எது?

1. கதிர்காமம் 2. முன்னேஸ்வரம் 3. சிவனொளிபாதமலை

48) ஓட்டப்போட்டியொன்றின்போது, ஒருவருக்கு 25g குளுக்கோஸ் வீதம், 10 ஓட்டவீரர்களுக்கு கொடுக்கப்பட்ட குளுக்கோஸின் அளவு கிராமில் ...........................


49) பெட்டி ஒன்றில் 8 காற்சட்டைகளை அடுக்கலாம். அவ்வாறான 908 காற்சட்டைகளை அடுக்க எத்தனை பெட்டிகள் தேவை? ...............................

50) 750g கடலையின் விலை ரூபா 90 எனின், 250g கடலையின் விலை யாது? ...................................

51) $\frac{2}{5}+\frac{3}{15}$ = ...........................................

52) இரண்டு நண்பர்கள் ஓரிடத்தில் இருந்து எதிரெதிர்த் திசையில் 100m தூரம் சென்று ஒருவர் இடதுபக்கமும் மற்றொருவர் வலது பக்கமும் திரும்பி 50m தூரம் சென்றனர். எனின், இருவருக்குமிடையே உள்ள தூரம் எத்தனை மீற்றர் ...........................

53) ஒரு வியாபாரி 300 மாம்பழங்களில் 2/3 பங்கை விற்று மிகுதியாக வைத்திருந்தார். அவர் மிகுதியாக வைத்திருந்த மாம்பழங்கள் எத்தனை? ...................................
அதனைப் பின்னத்தில் தருக? ..................................

54)  இவ்வுருவிற்கு வரையக்கூடிய சமச்சீர் அச்சுக்கள் எத்தனை?

55) நான்கு புத்தகங்களின் விலை ரூபா 48.00 எனின், 10 புத்தகங்களின் விலை யாது? ........................

56) கண்ணன் தனது வீட்டு வாசல் வழியே சென்ற வாகனங்களை எண்ணினான். அதில் 5 கார்கள், 10 சைக்கில் வண்டிகள், 7 முச்சக்கர வண்டிகள். எனின், அனைத்து வாகனங்களினதும் சில்லுகளின் எண்ணிக்கை யாது? ..................................

57) 5m நீளமும் 4m அகலமும் கொண்ட காணியின் பரப்பளவு யாது? ...........................................

58) லீப் வருடத்தில் உள்ள நாட்களின் எண்ணிக்கை யாது? ...........................................

59) 3000g இல் எத்தனை kg ...........................................

60) உமது பட்டமளிப்பு விழாவின்போது, உமது மனநிலையை ஆறு வாக்கியங்களில் தெளிவாகத் தருக.

1. ..........................................
2. ..........................................
3. ..........................................
4. ..........................................
5. ..........................................
6. ..........................................

**வினாத்தாள் II இன் விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரமழானை முழு வாழ்க்கைக்குமான பயிற்சிக் காலமாகக் கொள்வோம்!

அல்லாஹுத்தஆலாவின் அளப்பரிய அருட்கொடைகளை சுமந்து வந்திருக்கும் புனித ரமழான் மாதத்தின் இறுதிக் கட்டத்தில் இருக்கின்றோம். மகத்துவம் மிக்க மாதமே இந்த ரமழான். இதனால்தான், ரமழான் மாதத்தை முஸ்லிம்கள் ஆவலோடும் ஆர்வத்தோடும் வரவேற்கின்றனர்.

''நோன்பாளிக்கு இரண்டு சந்தோசங்கள் உள்ளன. ஒன்று-நோன்பு திறக்கும்போது ஏற்படும் சந்தோசம். மற்றையது-தனது இறைவனை மறுமையில் நேரில் சந்திக்கும்போது ஏற்படுகின்ற சந்தோசம்'' என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (ஆதாரம்: திர்மிதி)

இதன்மூலம் நோன்பு எந்தளவு மகத்துவம் மிக்கது என்பதை உணரக்கூடியதாக இருக்கின்றது.

## ரமழான் மாதத்தின் சிறப்புக்கள் சில...

✱ சங்கைமிகு அல்குர்ஆன் அருளப்பட்ட, ஆயிரம் மாதங்களைவிடச் சிறந்த லைலதுல் கத்ர் இரவினைக் கொண்ட மாதம்.

✱ அல்லாஹுத்தஆலாவிடம் பாவமன்னிப்புக் கிடைக்கும் மாதம்.

✱ முன்-பின் பாவங்கள் மன்னிக்கப்படும் மாதம்.

✱ தீயவற்றைத் தவிர்த்து, நன்மைகளை மட்டுமே நாடக்கூடிய மாதம்.


✱ சுவனத்தின் கதவுகள் திறக்கப்படும் மாதம்; நரகத்தின் கதவுகள் மூடப்படும் மாதம்.

✱ ஷைத்தான் விலங்கிடப்படும் மாதம்.

ஆக, இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட இந்த மகத்துவம் மிக்க மாதம் இன்னும் ஓரிரு தினங்களில் நம்மிடமிருந்து விடைபெற்றுச் செல்லவுள்ளது. எவ்வாறாயினும், ரமழான் மாதம் விடைபெற்றுச் செல்வதோடு, அதில் செய்த நற்காரியங்களை நாம் நிறுத்திவிடக்கூடாது. மாறாக, இந்த மாதத்தை முழு வாழ்க்கைக்குமான சிறந்த பாடமாகவும் பயிற்சிக் காலமாகவும் கொள்ளவேண்டும்.

## பெருநாளும் நாமும்

முஸ்லிம்கள் தங்களது புனித மாதமாகிய ரமழான் முழுவதும் நோன்பு நோற்று முடித்ததை அடுத்து, ஷவ்வால் மாதம் தலைப்பிறை பார்த்த பின்னர் கொண்டாடப்படுவதே 'ஈகைத் திருநாள்' எனும் 'நோன்புப் பெருநாள்' ஆகும். அல்லாஹுத்த ஆலாவின் கட்டளைக்கு அடிபணிந்தவர்களாக பசி, தாகம், உடலிச்சைகள் என்பனவற்றைக் கட்டுப்படுத்தி, அல்லாஹுத்த ஆலாவின் அருளையும் நற்கூலியையும் மட்டுமே நாடிய அடியார்களுக்காக அல்லாஹுத்தஆலா அளிக்கும் பரிசாகவே இந்த நோன்புப் பெருநாள் அமைந்துள்ளது.



பெருநாள் தினத்தில் அதிகாலையில் குளித்து-புத்தாடைகளையோ அல்லது ஆடைகளில் சிறந்ததையோ அணிந்து கொள்வது சுன்னத்தாகும். அத்துடன், பெருநாள் தொழுகைக்குச் செல்லும் முன்னர் காலை உணவை அல்லது ஒற்றைப்படையாக பேரீச்சம்பழத்தை உட்கொண்டுவிட்டுச் செல்வது நபி வழியாகும். செல்லும் வழியில் பெருநாள் தக்பீரை மொழிந்தவாறு செல்வதும் வரவேற்கத்தக்கது. இரண்டு ரக்அத்கள் தொழப்படும் பெருநாள் தொழுகையை, பள்ளியில் தொழாமல் திடலில் கூட்டாகத் தொழுவது நபி வழியாகும். தொழுகையின் பின்னர் பெருநாள் உரையை செவிமடுப்பதும் விரும்பத்தக்கது. தொழுகைக்குச் செல்வதற்கும் திரும்பி வருவதற்கும் வெவ்வேறு வழிகளை நபி(ஸல்) அவர்கள் பயன்படுத்தியுள்ளார்கள். தவிர, அன்றைய தினத்தில் நம் அனைவரினதும் நலனுக்காக அல்லாஹுத்தஆலாவிடம் பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும். எல்லோருடனும் நல்லுறவினைப் பேணுவதோடு, அந்த உறவு என்றென்றும் நிலைத்திருக்க வழியமைத்துக் கொள்ளவும் வேண்டும்.

அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நோன்புப் பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

'ஈத் முபாரக்'

ஜீநு



## ஸகாதுல் ஃபித்ர்

புனிதமான இந்த மாதத்தின் நிறைவில் கடமையாக்கப்பட்ட ஒன்றுதான் 'ஸகாதுல் ஃபித்ர்' எனும் நோன்புப் பெருநாள் தர்மம் ஆகும். நோன்பு நோற்றவர்களிடமிருந்து வீண் தவறுகள் நிகழ்ந்திருப்பின், அவற்றிலிருந்து தூய்மை பெறுவதற்காகவும் ஏழை-எளியோருக்கு உதவியாகவும் உணவாகவும் இருப்பதற்காகவுமே ஸகாதுல் ஃபித்ர் கடமையாக்கப்பட்டிருக்கின்றது. குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்காகவும் இது வழங்கப்படல் வேண்டும். கோதுமை, பேரீச்சம்பழம், அரிசி என்பனவற்றில் ஏதாவதொன்றை, நடுத்தர வயதுடைய ஒருவரின் இரு கைகளின் கொள்ளளவின் நான்கு மடங்கு ஸகாதுல் ஃபித்ராக வழங்கப்பட வேண்டும். பெருநாள் தொழுகைக்குச் செல்வதற்கு முன்னர் அதைக் கொடுத்துவிட வேண்டும். பெருநாள் தினத்திற்கு ஓரிரு தினங்களுக்கு முன்னரும் கொடுக்கலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த கல்வியைப் பெற...



சிறந்த கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு புத்தகமும் எழுத்துப்பரீட்சையும் மட்டும் போதாது. இவற்றையும் கடந்து கற்றதை நடைமுறைப்படுத்துவதும் அதனூடாகப் பெற்றுக்கொள்ளும் அனுபவமும் நிச்சயமாகத் தேவைப்படுகிறது. இதனை வழங்க பாடசாலைச் சூழல் மட்டுமன்றி, வீட்டுச் சூழலும் ஊக்கமளிப்பதாக அமைந்திருக்கவேண்டும். பெற்றோர்-மாணவர்கள் இணைந்து வீட்டிலும் மாணவர்கள்-ஆசிரியர்கள் இணைந்து பாடசாலையிலும் கல்விச்சூழலை உருவாக்கிக் கொள்ளவேண்டும். அப்போதுதான் வினைத்திறன் மிக்கதொரு கல்வியை மாணவர்கள் பெற்றுக்கொள்ளமுடியும். இதனூடாகத்தான் மாணவர்கள் பன்முக ஆளுமையை விருத்திசெய்துகொள்ளவும் முடியும்.

ஒரு மாணவனின் சிந்தனை, நடத்தை, பொதுநலன், பேச்சாற்றல், பழக்கவழக்கங்கள், பண்பாடு, கட்டுப்பாடு போன்றவற்றைக்கொண்டே அவனது ஆளுமையை கணிப்பிட முடியும். இவ்வாறான அம்சங்களில் முதிர்ச்சியடைகின்ற அல்லது பக்குவப்படுகின்றபோதுதான் குறித்த மாணவன் சிறந்த கல்வியினைப் பெற்றுக்கொள்கிறான்.

மேலும், ஒரு மாணவன் வகுப்பேற்றப்படுவதினூடாக மட்டும் முழுமையான ஆளுமைப்பண்பை அடைந்துவிட்டான் என்றும் கூறமுடியாது. இம்மாணவன் எழுத்துப் பரீட்சையில் சித்தி பெற்றிருக்கிறானேதவிர, ஏனைய விடயங்களில் எந்தளவு தேர்ச்சி பெற்றிருக்கிறான் என்பதை பண்பு




விருத்திசார் கணிப்பீடுகளின்மூலமே அறிந்துகொள்ள முடியும். இத்தகைய பண்பு விருத்திகளை பாடசாலைக்கு வெளியிலுள்ள சூழலிலேயே இலகுவாக அவதானிக்கவும் காத்திரமாக நெறிப்படுத்தவும் முடியும்.

(தொடரும்)

**தொகுப்பு: றினோஸ் ஹனீபா**
PgDPCS (UoC), LLB (Lon), BSW (NISD)

## விஜய் மாணவர் கழகம்


அங். இல: 5272
ஜெ.அருலாஷ், தோணிக்கல், வவுனியா.


அங். இல: 5273
உம்முகுல்சும் ரிபாய், தெல்லங்க, கெலிஓய.


அங். இல: 5274
ந.கவிந்தன், உயரப்புலம், இளவாலை.


அங். இல: 5275
எஸ்.தர்ஷன்குமார், ஹபரகல டிவிசன், பொரகஸ்.


அங். இல: 5276
ஜெ.அனுராதை, சிவன்கோவில் வீதி, சித்தங்கேணி.


அங். இல: 5277
ஜெ.றோயல் டன்சியா, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.


அங். இல:5278
கே.எம்.உமைர், அகலகொடுவ, புசல்லாவ.


அங். இல: 5279
பி.சபேசன், சோலன்ஸ்ட, லுணுகலை.


அங். இல: 5280
ஆர்.சஜிதா பானு, காக்காமுனை-07, கிண்ணியா.


அங். இல: 5281
பி.ஜெயப்பிரதீபன், பரிகாரிகண்டல், முருங்கன்.


அங். இல: 5282
அப்துல்லாஹ் அப்றிஜ், ஒபேசேகரபுர, இராஜகிரிய.


அங். இல: 5283
எம்.முர்சித், மின்ஹாத் மாவத்தை, திஹாரி.

படத்தை இங்கே ஒட்டவும்



விஜய்
மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ..................................................
முகவரி: ..................................................
..................................................
பாடசாலை: ..................................................
வகுப்பு: ..................................................
திகதி: ..................................................

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

Dialog தொலைபேசியில் ஆங்கிலம் மூலம் SMS ஊடாக

* தினமும் அரச மற்றும் தனியார் துறை வேலைவாய்ப்புகள், IT Tips (தகவல் தொழில்நுட்பத் துளிகள்)
* ஆங்கில Proverb, Idiom மற்றும் Quote களை தினமும் பெற்றுக்கொள்ளலாம்.
* முக்கிய செய்திகள், பொதுஅறிவு, புதிய கண்டுபிடிப்புகள் என மேலும் பல்வேறு பட்ட விடயங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

அருகில் காட்டப் பட்டவாறு செயற் படுத்தவும்.




## தெரிந்து கொள்வோம்



* இலங்கையில் தேசிய அடையாள அட்டை வழங்கும் முறை 1972 இல் அமுலுக்கு வந்தது. இலங்கையில் முதலாவது தேசிய அடையாள அட்டையைப் பெற்றவர் யார்?
  ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க
* ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ள மிகவும் உயரமான மலை எது?



  கிளிமஞ்சாரோ மலை



* ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றம் நெஷனல் அசெம்ப்ளி என்று அழைக்கப்படுகின்றது. அதேபோன்று, சீன மக்கள் நாடாளுமன்றம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
  நெஷனல் பீபல்ஸ் கொங்ரஸ் (National People's Congress)



* ஆப்கானிஸ்தானையும் பாகிஸ்தானையும் இணைக்கும் பிரதான கணவாய் எது?
  கைபர் கணவாய்
* உலகில் மிக அழகான பவளப் பாறைகள் அவுஸ்திரேலியாவின் கிழக்கில் உள்ள கோரல் கடற்கரையில் காணப்படுகின்றன. அவை என்ன பெயரால் அழைக்கப்படுகின்றன?
  க்ரேட் பேரியர் ரீஃப் (Great Barrier Reef)



* தேயிலையின் தாவரவியல் பெயர் என்ன?
  *Camellia sinensis*




* மொரோக்கோவில் பிறந்து இந்திய மன்னர்களில் உயர் பதவி வகித்த அரேபியர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்தார். அவர் யார்?
  இப்னு பதூதா
* வெந்நீர் ஊற்றுக்கள் 'ஜீசர்' என அழைக்கப்படுகின்றன. இலங்கையில் வெந்நீர் கிணறுகளுக்கு புகழ்பெற்ற இடம் எது?
  கன்னியா

**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கிபீடியா: தகவல் தொகுப்பில் நடைபெறும் மறைமுக யுத்தம்






இணையத்தில் தகவல்களைத் தேடுவோருக்கு அவற்றினைப் பெற்றுக்கொடுப்பதில் 'விக்கிபீடியா' (Wikipedia) சேவையானது, பெரும் பங்களிப்பினைச் செய்து வருகின்றது. எனினும், விக்கிபீடியாவின் பதிவுசெய்யப்பட்ட எந்தவொரு பயனாளர்களாலும், இதில் உள்ள தகவல் திரட்டுக்களில் மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்பதனால், இதன் நம்பகத்தன்மை குறித்து பல்வேறு சந்தேகங்களும் எழுப்பப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், விக்கிபீடியாவின் ஆக்கங்களில் ஏற்படுத்தப்படுகின்ற மாற்றங்கள் தொடர்பில் அண்மையில் Oxford பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த ஆய்வுக்குழுவொன்று ஏனைய சில கல்வி நிறுவனங்களுடன் இணைந்து ஆய்வொன்றினை மேற்கொண்டது. குறித்த ஆய்வின் முடிவில், சில சுவாரஷ்யமான முடிவுகளும் வெளியாகியுள்ளன.



குறித்த ஆய்வானது, 2010 ஆம் ஆண்டில் விக்கிபீடியாவில் பிரசுரிக்கப்பட்டிருந்த ஆக்கங்களை அடிப்படையாகக்கொண்டே மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், English, Persian, Arabic, Spanish மற்றும் Czech ஆகிய மொழிகளிலான ஆக்கங்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டிருந்தது. இதன்படி, அதிகளவில்



மாற்றங்களுக்குட்படுத்தப்பட்டிருந்த முக்கியமான தலைப்புகளாக Adolf Hitler, The Holocaust, God மற்றும் Israel ஆகியன இனங்காணப்பட்டுள்ளன. ஆங்கில மொழியினைப் பொறுத்தவரையில், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியான George W Bush சம்பந்தப்பட்ட பிரசுரிப்புகளே, அதிகளவில் மாற்றங்களுக்குட்படுத்தப்பட்டுள்ளன. மதசம்பந்தமான ஆக்கங்களைப் பொறுத்தவரையில் Jesus, Christianity மற்றும் Prophet Muhammad ஆகிய தலைப்புகள் அதிகளவில் மாற்றங்களுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த ஆக்கங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக மறைமுகமான நிலையில் பாரிய போரொன்று இடம்பெற்றுள்ளதைப் போன்ற தோற்றப்பாடு காணப்படுவதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். ஆக்கமொன்றில் மாற்றமொன்று ஏற்படுத்தப்பட்டு, சில நிமிடங்களில் அதில் மீளவும் மாற்றம் செய்யப்பட்டுள்ள பல சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. இதனை அவர்கள் 'Edit War' என்று சுவாரஷ்யமாகக் குறிப்பிடுகின்றனர்.

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, ஒகஸ்ட் மாதம் 07 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இங்கே மடிக்கவும்

# விஜய் நுட்பம்

எஸ்.பிரதீப்

2013, ஒகஸ்ட், 07, புதன்கிழமை

## Mobile Application மூலம் Facebook பாவனையாளர்களின் எண்ணிக்கை 100 மில்லியனைத் தாண்டியது!








சமூக வலைத் தளங்களில் முன்னணியில் இருக்கும் Facebook இனை, Mobile Application மூலம் பயன்படுத்தும் பாவனையாளர்களின் எண்ணிக்கை மாதத்திற்கு 100 மில்லியன் என்ற இலக்கைக் கடந்துள்ளதாகவும் அந்த எண்ணிக்கை மாதத்திற்கு 115 மில்லியன் என்ற ரீதியில் இருப்பதாகவும் Facebook நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தியா, இலங்கை, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் Facebook பிரபலம் ஆவதற்கு Facebook Mobile Application மிகவும் உதவுகிறது என அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. 'Facebook For Every Phone' அதாவது, 'அனைத்து மொபைல்களுக்கும் Facebook' என்ற இந்த Application ஆனது, மக்கள் எளிதாக மொபைல் மூலம் அதனைப் பயன்படுத்த உதவுகிறது. இந்த Application ஐ சுமார் 3,000 வெவ்வேறு வகையான மொபைல்களில் பயன்படுத்தலாம் என Facebook நிறுவனம் தெரிவித்திருக்கிறது.





News Feed, Photo Uploads, Message போன்ற அடிப்படை அம்சங்களை இந்த Application தன்னகத்தே கொண்டுள்ளது. 2011 இல் Facebook இன் வளர்ச்சி அணியுடன் இஸ்ரேல் நிறுவனமான snaptu இணைந்தது. snaptu நிறுவனத்தின் தொழில்நுட்பம் மூலமே இந்த Mobile Application தயாரிக்கப்பட்டது.

**அன்பு வாசகர்களே...!**

'நுட்பம்' பகுதியில் வெளியாகும் தகவல்கள் குறித்து உங்கள் கருத்துக்களை அறிய விரும்புகின்றோம். அத்துடன், இப்பகுதியூடாக நீங்கள் மேலதிகமாக அறிய விரும்புகின்ற கணினி சார்ந்த விடயங்கள் குறித்தும் எமக்கு அறியத்தாருங்கள். nutpamvijey@gmail.com எனும் மின்னஞ்சலூடாக, உங்கள் கருத்துக்களையும் நீங்கள் அறிய விரும்பும் விடயங்களையும் இன்றே முன்வையுங்கள்.

# QR Code இனை இலகுவாக வடிவமைக்க ஒரு மென்பொருள்

மிக வேகமாக வளர்ச்சியடைந்துவரும் தொழில்நுட்ப உலகில், Bar Code இற்கு அடுத்தபடியாக தற்போது QR Code இன் பயன்பாடும் பரவலாக அதிகரித்து வருகின்றது. இதற்குரிய காரணங்களாக, QR Code இனை மொபைல்போன்கள்



மற்றும் ஐ பேட்கள் போன்ற அதிநவீன இலத்திரனியல் சாதனங்களில் பயன்படுத்தக்கூடியதாக உள்ளமை,



அதன் இலகுத்தன்மை, பாதுகாப்புக்கு உத்தரவாதம், பல்வேறு தகவல்களையும் உள்ளே பொதிந்துகொள்ளக்கூடியதாக உள்ளமை என்பனவற்றினைக் குறிப்பிடலாம்.

QR Code இனைத் தயாரித்துக்கொள்வதற்கு Free QR Creator எனும் மென்பொருளை நீங்கள் பயன்படுத்தலாம். இந்த மென்பொருளின் உதவியுடன் எழுத்துக்கள், இணைய முகவரிகள், ஏனைய தரவுகளை உள்ளடக்கியதாக QR Code இனை உருவாக்கிக்கொள்ள முடியும். நீங்கள் கொடுக்கும் தகவல்கள் எந்தவிதமான QR Code ஆக வெளிவரப்போகின்றன என்பதை live preview வசதிமூலம் நீங்கள் பார்க்கலாம்.

அத்தோடு, ஏனைய கறுப்பு-வெள்ளை நிற QR Code களிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் விதமாக, வேறு வர்ணங்களையும் தெரிவுசெய்து QR Code களை உருவாக்கலாம். அவ்வாறு பெறப்படும் QR Code இனை, rotate செய்யவும் border ஒன்றை அமைத்துக்கொள்ளவும்கூட இந்த மென்பொருளில் வசதியுள்ளது. வெளியீட்டினை அச்சுப்பதிப்பதற்கோ, இணையத்தில் வெளியிடுவதற்கோ ஏற்றவகையில் JPG, PNG, GIF, Tiff, BMP போன்ற வடிவங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பது இந்த மென்பொருளின் மற்றுமொரு சிறப்பம்சமாகும்.



# Windows 7, Windows 8 குறைபாடுகள் அம்பலமாகின!

Microsoft நிறுவனத்தின் Windows 7 மற்றும் Windows 8 ஆகிய இயங்குதளங்களில் (Operating System) குறைபாடு இருப்பதாகக் கண்டறியப்பட்டு, அது தொடர்பான விபரங்கள் Google நிறுவனத்தின் பணியாளரான Tavis Ormandy என்பவரால், வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளன.


Tavis Ormandy

கண்டறியப்பட்டிருந்தது. எனினும், குறித்த தகவல் வெளியாகி ஒரு சில நாட்களின் பின், குறித்த குறைபாட்டிற்கான தீர்வுகளடங்கிய மேம்படுத்தலை (updates), Microsoft நிறுவனம் வெளியிட்டது.





இவ்வாறான உயர் தொழில்நுட்பக்குறைபாடுகள் தொடர்பான தகவல்களை பொது மக்களுக்கு நேரடியாக வெளிப்படுத்தும் Tavis Ormandy இன் செயற்பாடு குறித்து, சிலர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். இவ்வாறான வெளிப்படுத்தலானது, கணினித் தகவல் திருட்டுக்களுக்கு வழியேற்படுத்திக் கொடுக்கும் என அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் Microsoft நிறுவனத்திற்கு நேரடியாக எதுவிதமான தகவலையும் வழங்காத அவர், இக்குறைபாடு தொடர்பிலான தகவலை இணையத்திலேயே நேரடியாக வெளியிட்டுள்ளார். TrueType font வகையான கோப்புகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்ற சில உள்ளடக்கங்கள், Windows கணினிகளுக்கான முழுமையான கட்டுப்பாட்டினை, தகவல்களைத் திருடுபவர்களுக்கு (Hackers) வழங்க உதவுகின்றன என Tavis Ormandy இனால் கண்டறியப்பட்டிருந்தது.

இதற்கு முன்னரும் அதாவது, 2010 ஆம் ஆண்டில் விண்டோஸ் XP இயங்குதளத்தில் காணப்பட்டிருந்த குறைபாடு ஒன்றினை Tavis Ormandy கண்டறிந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

12

இங்கே வெட்டவும்

# பாவனையாளர்களிடத்தில் அதீத வரவேற்பைப் பெற்றுவரும் Android இயங்குதளம்



தற்போதைய உலகில் பாவனையாளர்களால் பெருமளவில் விரும்பப்பட்டு வருகின்ற Mobile இயங்குதளமாக (Operating System), அன்ட்ரொய்ட் (Android) காணப்படுகின்றது. அன்ட்ரொய்ட் இயங்குதளங்கள் ஏனைய



இயங்குதளங்களுடன் போட்டியிட்ட காலம் போய், தற்போது அன்ட்ரொய்ட் இயங்குதளம் அதன் பதிப்புகளுக்குள்ளேயே (Versions) போட்டி போட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அன்ட்ரொய்ட் இயங்குதளப் பதிப்புக்களின் பாவனை குறித்த புள்ளிவிபரங்கள் அண்மையில் Google நிறுவனத்தினால் வெளியிடப்பட்டிருந்தன. இதன்படி, இதுவரை காலமும் முன்னிலை பெற்றுவந்திருந்த அன்ட்ரொய்ட்டின் 'Ginger-bread' பதிப்பினைப் பின்தள்ளிவிட்டு, அன்ட்ரொய்ட்டின் 'Jellybean' பதிப்பு முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது. அன்ட்ரொய்ட்டின் ஏனைய பதிப்புக்களைப் பார்க்கும்போது, Ice Cream Sandwich பதிப்பானது, 23.3 வீதமான பாவனையைக் கொண்டுள்ளது. கடந்த மே மாதமளவில் Ice Cream Sandwich பதிப்பின் பாவனையை Jellybean பதிப்பு முந்தியிருந்தது. மேலும் அன்ட்ரொய்ட்டின் Donut, Eclair, Froyo and Honeycomb ஆகிய பதிப்புக்களை ஒருங்கிணைத்துப் பார்க்கும்போது, அவற்றின் பாவனை வீதமானது 5 வீதத்திற்கும் குறைவானதாகவே காணப்படுகின்றது. அன்ட்ரொய்ட் பதிப்பின் பாவனை அதிகரிப்புக்கு Samsung நிறுவனத்தின் S3, S4 ஆகிய கைத்தொலைபேசிகளின் பாவனை பிரதான காரணமாக அமைந்துள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.






PUBLIC LIBRARY
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## தகவல் சேமிப்பில் அதிநவீன தொழில்நுட்பம்:

# 11 லட்சம் HD திரைப்படங்களை ஒரே Disk இல் சேமிக்கலாம்!!



CD, DVD, Bluray என்று தகவல்களைப் பதிந்து சேமிக்கும் நுட்பம் வளர்ந்துவந்திருந்தாலும் அதில் வளர்ச்சிப் பாய்ச்சல் என்று எதுவும் பெரிதாக நடந்ததில்லை. ஆனால், தற்போது Swinburne பல்கலைக்கழக ஆய்வாளர்களால் கண்டறியப்பட்டிருக்கும் தொழில்நுட்பமானது, அந்தக் குறையை நிவர்த்திசெய்திருக்கிறது.

அவுஸ்திரேலியாவின் Swinburne University of Technology யைச் சேர்ந்த ஆய்வாளர்கள், Petabyte (10, 48, 576 Gigabytes) அளவுடைய தகவல்களை பதியக்கூடிய Disk ஒன்றைத் தயாரித்திருக்கின்றனர். இந்த Disk இல் HD தரமுடைய 11 லட்சம் திரைப்படங்களை சேமிக்கலாம் என்பது, அதன் கொள்ளளவின் பாரிய தன்மையை உங்களுக்கு உணர்த்தியிருக்கும்.

"தற்போதைய ஆராய்ச்சியின் மூலமாக, மிக நுணுக்கமான தகவல் பதியும் நுட்பத்தை கண்டறிந்திருக்கிறோம். Focal Point என்று சொல்லக்கூடிய மனித தலைமுடியின் முனையில் 10,000 இல் ஒரு பங்கு அளவுடைய மிக நுண்ணிய எழுது முனையின்மூலம் தகவல்களைப் பதியும் இந்த தொழில்நுட்பமானது, மிக அதிகமான தகவல்களை Disk களில் எழுதுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது" என்று இந்த ஆராய்ச்சியில் முக்கிய பங்கு வகித்த ஆய்வாளரான பேராசிரியர் Min Gu தெரிவித்துள்ளார்.



இந்த புதிய கண்டுபிடிப்பானது, 1837 ஆம் ஆண்டில் Ernst Abbe யினால் நிறுவப்பட்டிருந்த ஒளி அலை நீளம் தொடர்பான அடிப்படைத் தத்துவத்தையும் பிழையென நிரூபித்திருக்கிறது. இந்த தொழில்நுட்பமானது, விரைவில் பொதுப்பாவனைக்கும் வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



# வெற்றி வாழ்க்கைக்கு சிறந்த முன்மாதிரி:

# பில் கேட்ஸ்

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

இப்படி Operating System பந்தயத்தில் கவனம் செலுத்திய பில் கேட்ஸ், இணையப் புரட்சியைத் தவறவிட்டார். அப்போது, இணையத்தளங்களில் உலாவுவதற்கு Netscape Navigator என்ற உலாவி பிரபலமாக இருந்தது. சுமார் 85 வீதம் பேர் இந்த உலாவியைப் பயன்படுத்தியே இணையத்தில் உலாவினார்கள்.

அதனால் என்ன... பில் கேட்ஸ் கையில்தான் 'உருவாக்கத் தவறினால் உருவாக்கியவனை அழுத்து' என்ற ஒரு வெற்றி formula இருக்கிறதே...! மனம் தளராமல் Internet Explorer என்ற உலாவியை அவர் தயாரித்தார். இதன்மூலம், Netscape Navigator பக்கம் திரும்பியிருந்த மக்கள் கவனத்தை தன் பக்கம் திருப்ப அவர் எடுத்த ஆயுதம்தான் 'இலவசம்'. இதற்கமைய, Window Operating System உடன் Internet Explore இனை இலவசமாக மக்களுக்கு வழங்கினார். இந்த சலுகையை அடுத்து சிறிது நாட்களில் Netscape Navigator பின்னுக்குத் தள்ளப்பட்டது.




இந்த நிலையில், Windows என்ற அரக்கனை வைத்துகொண்டு எல்லா Software நிறுவனங்களையும் நசுக்குவதாக குற்றஞ்சாட்டி, பில் கேட்ஸ் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டார். அங்கு Microsoft இன் சட்ட விரோத நடவடிக்கை நிரூபிக்கப்பட்டது. இதனால், Microsoft இரண்டாகப் பிரிய வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டது. Operating System தயாரிக்கவென்று ஒன்றும் பிற Software களைத் தயாரிக்கவென ஒன்றும் என அது அமைய வேண்டும் எனக் கட்டளை பிறப்பித்தது. ஆனால், Software இற்கு முன்னால் சட்டம் கொஞ்சம் பலவீனமாகத்தான் பேசியது. பின்னர், அந்தத் தண்டனை வெகுவாகக் குறைக்கப்பட்டது.

எவ்வளவு தடைகள் வந்தாலும், இன்றளவிலும் Software கொடி உயரத்தான் பறக்கிறது.




'உழைக்கத் தயங்காதே! ஒரு கட்டத்துக்கு மேல் போனபிறகு உண்மையாக உழைப்பவனுடைய உழைப்பைத் தனதாக்கிக் கொள்ளவும் தயங்காதே' இதுதான் பில் கேட்ஸின் வெற்றி formula. அதற்கான உதாரணமாகவே பில் கேட்ஸ் திகழ்கின்றார்.



Microsoft

2006 இல் Microsoft நிறுவனத்தின் முழுநேர தலைமைப் பொறுப்பிலிருந்து விலகிய அவர், அதன்பின்னர், Microsoft இன் 'தலைவர்' என்ற பதவியுடன் கம்பெனியை நடத்தி, மேற்பார்வை செலுத்திவந்தார்.ஆக, பில் கேட்ஸ் எனும் மனிதரும் அவர் உலக மக்கள் மீது ஏற்படுத்திய தாக்கமும் Software சாம்ராஜ்ஜியத்தின் நிகரில்லாச் சக்கரவர்த்தி என்ற அடையாளத்தோடு, என்றும் நிரந்தரமாகப் பொறிக்கப்பட்டிருக்கும் என்பதை யாரும் மறுக்க முடியாது.


*(முற்றும்)*




Microsoft தயாரிப்புக்கள் சில...

தொகுப்பு: எம்.ஜரூக் முஹம்மத்
(நன்றி:இணையம்)

# தளிர்கரம்




படத்தில் உள்ளவாறு உரு ஒன்றை அமைக்க.




படங்களுக்கு ஏற்றவாறு காலங்களை எழுதுக.





எத்தனை உள்ளன என்பதை எண்களில் குறிப்பிடுக.




குறிக்கப்பட்டுள்ள நிறங்களை உருக்களுக்குத் தீட்டுக.

# அகமுகித் தொடர்பாடலின் இயல்புகள்



ஊடக பாடநெறி 45

தொடர்பாடல் செயல் ஒழுங்கின் அடிப்படையானதும் ஆரம்பமானதுமான தொடர்பாடல் வகையாக அகமுகித் தொடர்பாடல் அமைகின்றது. நபர் ஒருவரினுள் இடம்பெறுகின்ற சுய தொடர்பாடல் தொழிற்பாடு மற்றும் ஐம்புலன்களினால் நுகரப்படுகின்ற தகவல்கள் என்பன அடிமனதில் பதிவுக்குள்ளாக்கப்படுகின்றன. இவை குறுங்கால, நீண்டகால ஞாபக செயன்முறைக்குட்படுத்தப்பட்டு, சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப ஆழ்மனப் பதிவுத் தகவல்கள் மீள் நினைவுக்குட்படுத்தப்படுகின்றன.

அகமுகித் தொடர்பாடலில் உடல், உள்ளம் சார்ந்த உணர்ச்சிகள், புலன் உணர்வுகள் போன்றன முக்கிய இடம் வகிக்கின்றன. இவ்வகை தொடர்புக்கு தூண்டல் (Stimulus) பிரதான காரணமாக அமைகின்றது. செயல்களுக்கு அல்லது தூண்டல்களுக்கு பதிலாக அமைகின்ற வெளிப்பாடுகள் அதாவது துலங்கல்களே தன்னுள் இடம்பெறுகின்ற தொடர்பாடலாகும். இதில் அனுப்புநரும் பெறுநரும் ஒருவரே.

இத்தொடர்பாடலில் பின்னூட்டல் தொழிற்பாடுண்டு. வெளிப்புற பின்னூட்டல், உட்புற பின்னூட்டல் என இருவகையில் இது இடம்பெறுகின்றது. ஒரு நபரிடம் காணப்படுகின்ற தகவல்களைப் பயன்படுத்தல் தொடர்பு தொழிற்பாட்டின் பிரதான கருமமாகின்றது. இதனூடாக, சிறந்த தீர்மானமெடுத்தல் முதன்மை செயற்கூறாக சுட்டிக்காட்டப்படுகின்றது.



இதற்கு ஒருவரின் சுயமதிப்பீட்டுக்கும், சுயகண்ணோட்டத்திற்கும், சுய எண்ணக்கரு உருவாக்கத்திற்கும் தன்னளவில் உள்ள தகவல் அடிப்படைகளே காரணிகளாக அமைகின்றன. மனங்களின் சமநிலையற்ற சந்தர்ப்பங்களில் உருவாகின்ற எழுச்சி நிலைகளினால் அகமுகித் தொடர்பாடல் செயன்முறை வினைற்றிறன் அற்றதாகவும், செயற்றிறன் அற்றதாகவும் அமைய வாய்ப்புக்கள் உருவாக்கிவிடுகின்றன. (தொடரும்)

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.


## நோன்புப் பெருநாளையொட்டி திறமைகளின் களம்

3 ஆவது வருடமாக பொத்துவில் நகரில்
நோன்புப் பெருநாளை முன்னிட்டு
திறமைகளை வெளிப்படுத்துவதற்கான களம்...

இரண்டு தினங்கள்

* பெருநாள் தினத்தன்று:
அம்சங்கள்: சிறு போட்டி நிகழ்ச்சிகள், பாடல், நடனம், வாழ்த்துப் பரிமாறல், பார்வையாளர் நிகழ்ச்சிகள்.
இடம்: பொத்துவில் பிரதான வீதி.
நேரம்: காலை 8 மணி தொடக்கம் மு.ப. 11 மணி வரை...

* பெருநாள் மறுதினம்:
அம்சங்கள்: மேடைநிகழ்ச்சி (நாடகம், நடனம், பாடல், கேள்வி-பதில், விவாதம்).
இடம்: களப்புக்கட்டு பிரதான வீதி, பொத்துவில்-15.
நேரம்: மாலை 3 மணி தொடக்கம் இரவு 10 மணி வரை...

அனுமதி இலவசம்...

போட்டி அமைப்பு: Festival Programme Group
மேலதிக விபரங்களுக்கு தொ.பே.இல. 077 7342929

ஊடக அனுசரணை: விஜய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

**இன்றைய பாடத்தில் அக்காவுக்கும் தம்பிக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

**අක්කා: මල්ලි, පනාව කෝ?**
மல்லி, பனாவ கோ?
அக்கா: **தம்பி, சீப்பு எங்கே?**

**මල්ලි: පනාව මේසය උඩ ඇති - ගන්න.**
பனாவ மேசய உட எத்தி- கன்ன.
தம்பி: **சீப்பு மேசைக்கு மேலே இருக்கும்- எடுங்கள்.**

**අක්කා: මේසය උඩ නැහැනේ මල්ලි.**
மேசய உட நெஹெனே மல்லி.
அக்கா: **மேசைக்கு மேல் இல்லையே தம்பி.**

**මල්ලි: එහෙනම් මගේ කාමරයේ කණ්ණාඩි මේසය උඩ ඇති. ඇයි ඔයාගේ පනාව කෝ?**
எஹெனம் மகே காமரயே கண்ணாடி மேசய உட எத்தி.
எய் ஒயாகே பனாவ கோ?
தம்பி: **அப்படியென்றால் என் அறையில் கண்ணாடி மேசைக்கு மேலே இருக்கும். ஏன் உங்களுடைய சீப்பு எங்கே?**

**අක්කා: මගේ පනාව නැති වෙලා.**
மகே பனாவ நெதி வெலா.
அக்கா: **என்னுடைய சீப்பைக் காணவில்லை.**

**මල්ලි: එහෙනම් නංගි අරගෙන ඇති. එයාගෙන් අහන්න.**
எஹெனம் நங்கி அரகென எத்தி. எயாகென் அஹன்ன.
தம்பி: **அப்படியென்றால் தங்கை எடுத்திருப்பாள். அவளிடம் கேளுங்கள்.**

**අක්කා: නංගි නැහැනේ. එයා පන්ති ගිහිල්ලා.**
நங்கி நெஹெனே. எயா பந்தி கிஹில்லா.
அக்கா: **தங்கை இல்லையே. அவள் வகுப்புக்குப் போய் இருக்கிறாள்.**

**මල්ලි: නංගි කා එක්කද ගියේ?**
நங்கி கா எக்கத கியே?
தம்பி: **தங்கை யாருடன் போனாள்?**

**අක්කා: අම්මා එක්ක.**
அம்மா எக்க.
அக்கா: **அம்மாவுடன்.**

**මල්ලි: අක්කා, ඔයා මගේ පනාව ගත්තද?**
அக்கா, ஒயா மகே பனாவ கத்தத?
தம்பி: **அக்கா நீங்கள் என்னுடைய சீப்பை எடுத்தீர்களா?**

**අක්කා: ඔව් මල්ලි, මම එතනම තියන්නම්.**
ஒவ் மல்லி, மம எதனம தியன்னம்.
அக்கா: **ஆம் தம்பி, நான் அங்கேயே வைக்கிறேன்.**

**මල්ලි: හොඳයි අක්කේ.**
ஹொந்தய் அக்கே.
தம்பி: **நல்லது அக்கா.**

### பயிற்சி

**இடைவெளிகளை நிரப்புக**

1. මල්ලි, ................................ කෝ?
2. ........................... මේසය උඩ ඇති.
3. එයා ................................ ගිහිල්ලා.




இறந்தகால தனி வாக்கியங்களில் (Past Simple Tense), **What, Where, When, How, Whom** முதலான வினைச்சொற்களுடன் (Question Words) ஆரம்பிக்கும் வினா வாக்கியங்களை மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) அவன் கொஞ்சம் இனிப்புகள் கொண்டுவந்தான்.
He brought some sweets.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஆ) அவன் இனிப்புகள் ஏதேனும் கொண்டுவந்தானா?
Did he bring any sweets?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

- He brought. (Affirmative)
  அவன் கொண்டுவந்தான். (உடன்பாடு)
- Did he bring? (Interrogative)
  அவன் கொண்டுவந்தானா? (வினா)
- What did he bring? (Interrogative)
  அவன் என்ன கொண்டுவந்தான்? (வினா)

(இ) அவள் தெருவில் ஒரு பேனாவைக் கண்டெடுத்தாள்.
She found a pen on the road.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஈ) அவள் ஒரு பேனாவை தெருவில் கண்டெடுத்தாளா?
Did she find a pen on the road?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(உ) அவள் இந்தப் பேனாவை எங்கே கண்டெடுத்தாள்?
Where did she find this pen?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

- She found. (Affirmative)
  அவள் கண்டெடுத்தாள். (உடன்பாடு)
- Did she find? (Interrogative)
  அவள் கண்டெடுத்தாளா? (வினா)
- Where did she find? (Interrogative)
  அவள் எங்கே கண்டெடுத்தாள்? (வினா)

(ஊ) ரொபர்ட் ரோயல் கலாசாலையில் ஆங்கிலம் கற்றான்.
Robert studied English at Royal Academy.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(எ) ரொபர்ட் ரோயல் கலாசாலையில்தான் ஆங்கிலம் கற்றானா?
Did Robert study English at Royal Academy?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(ஏ) ரொபர்ட் எங்கே ஆங்கிலம் கற்றான்?
Where did Robert study English?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

- Robert studied. (Affirmative)
  ரொபர்ட் படித்தான். (உடன்பாடு)
- Did Robert study? (Interrogative)
  ரொபர்ட் படித்தானா? (வினா)
- Where did Robert study? (Interrogative)
  ரொபர்ட் எங்கே படித்தான்? (வினா)

**குறிப்பு:**
- Bring- நிகழ்கால வினைச்சொல் (Present Tense Verb)
  brought - இறந்தகால வினைச்சொல் (Past Tense Verb)
- Find- நிகழ்கால வினைச்சொல் (Present Tense Verb)
  Found- இறந்தகால வினைச்சொல் (Past Tense Verb)

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகையை வாசிப்பதில் ஒழுக்கப் பண்பு



பத்திரிகை வாசிப்பதிலும் நாம் கையாள வேண்டிய சில ஒழுக்கப் பண்புகள் உள்ளன. அதாவது, பத்திரிகையை எப்போதும் அதன் பக்கங்களின் இலக்க வரிசைப் படியே ஒழுங்கமைப்பில் வைத்து வாசிக்க வேண்டும். பக்கங்கள் குழம்பியிருந்தால், அவற்றை ஒழுங்கு முறையில் அமைத்தல் நல்லது. இன்னொருவர் பத்திரிகையை வாசித்துக்கொண்டிருக்கும்போது, நமக்குப் பிடித்தமான ஒரு பக்கத்தைக் காட்டி அந்தப் பக்கத்தைத் தருமாறு கேட்கக்கூடாது. ஒருவர் பத்திரிகையை வாசித்து முடிப்பதற்கிடையில் அவசரப்படுத்தி பத்திரிகையை கேட்கவும் கூடாது.

ஒருவர் இரவல் தருகின்றார் என்பதற்காக அவர்கள் பத்திரிகையை சரிவரப் பார்ப்பதற்கிடையில் முந்திக்கொண்டு பத்திரிகையை கேட்பதை வழமையாக்கிக் கொள்ளாதீர்கள். நன்றாக ஆழ்ந்த சிந்தனையுடன் பத்திரிகையை ஒருவர் வாசித்துக்கொண்டிருக்கையில் அவரது கவனத்தை சிதறடிக்கும் விதமாக குறுக்கிட்டுப் பேச்சுக் கொடுக்காதீர்கள். பஸ்ஸில் பயணிக்கும்போது, பத்திரிகை வாசிப்பவர்கள் பக்கத்தில் அமர்ந்திருப்பவருக்கு இடைஞ்சல் இல்லாத வகையில் பத்திரிகையை விரித்து வாசிப்பதே நல்லது. பத்திரிகையை வாசித்து முடித்ததும் ஒழுங்காக மடித்து ஓர் இடத்தில் வையுங்கள்.

# கதையொன்று சொல்வேன்.....



(முன் கதையின் தொடர்ச்சி...)

ராமுவை உள்ளே வரும்படி பாலா அழைத்தான். ராமு உள்ளே வந்தவுடன் பாலா நடந்ததைக் கூறி அழுதான். ராமு பாலாவைப் பார்த்து, ''அழாதே'' என்று கூறி ஆறுதல்படுத்தினான். பாலா ராமுவிடம், ''என்ன செய்வது'' என்று கேட்டான். ராமுவோ, ''சிறிது நேரத்தில் வருகிறேன்'' என்று கூறிவிட்டு தனது வீட்டிற்குச் சென்றான். சிறிது நேரத்தில் ராமுவின் அம்மா ராமுவைத் திட்டும் சத்தம் பாலாவின் காதுகளில் விழுந்தது. பாலாவும் அவனது வீட்டு ஜன்னலில் இருந்து அவனது வீட்டை எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் ராமு திரும்பினான். ராமுவின் கையில் ஏதோ ஒரு பொருள் இருந்ததை பாலா அவதானித்தான்.

ஹ. அபிலாஷ்,
தரம் - 6D, கொ/இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி.

(இங்கிருந்து எவரேனும் இக்கதையை தொடரலாம். கதை 20 வரிகளுக்குள் அடங்குதல் வேண்டும்)

முகவரி: 'கதையொன்று சொல்வேன்'
விஜய்
த.பெ.இல - 2037
கொழும்பு.

# நிஜம் மாறிய படம்



இங்கு படுத்திருப்பவரின் முகம் தெரிவது போல் தோன்றினாலும் உண்மையில் அவரது முகமல்ல தெரிவது; புத்தக அட்டையிலுள்ள படமே அவரது முகம் போன்று தோற்றமளிக்கிறது.

# இப்படி இருக்காதீர்கள்...



ஏதோ ஒரு சுகவீனம் காரணமாக பாடசாலைக்கு வராத சக மாணவன் மறுநாள் பாடசாலைக்கு வந்ததும் அவன், தான் வராத நாட்களில் விடுபட்ட பாடக்குறிப்புக்களை (நோட்ஸ்) உங்களிடம் கேட்பதாக இருக்கலாம். இப்படியான சந்தர்ப்பங்களில் சிலர் தமது பாடக் குறிப்புக்களைக் கொடுக்காமல் மறைப்பதுண்டு. ஏதோ சாக்குப்போக்கு சொல்லி தவிர்க்க முயற்சிப்பர். பாடசாலைக்கு அந்த மாணவன் வராததற்கு நான் என்ன செய்வது என்று கேட்காதீர்கள். அவனால் இயலாத ஒரு காரணத்தால்தானே வர முடியாமல் போனது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இன்று அவனுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை நாளை உங்களுக்கும் ஏற்படலாம். அப்போது அவனது உதவி உங்களுக்குத் தேவைப்படலாம். இந்த உதவியை செய்வதால் நீங்கள் எதையும் இழந்துவிடமாட்டீர்கள்.

நான் உண்டு என் வேலை உண்டு என்று இருப்பதை விட, நான் உண்டு பிறருக்கு என் உதவியுண்டு என்று வாழப் பழகிக் கொள்ளுங்கள்.

# விஜய் உடன் TOP NEWS வழங்கும் வாரம் ஒரு iPod... வெல்லுங்கள்




பிரதி புதன்கிழமைகளில் வெளிவரும் 'விஜய்' பத்திரிகையை நன்கு வாசித்து அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் 'Top News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் iPod இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற்படுத்திக் கொள்ளுங்கள்.

'Top News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி தபாலட்டையில் ஒட்டி 14.08.2013 ஆம் திகதிக்குள் அனுப்புதல் வேண்டும். கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்கு தெரிவுசெய்யப்படும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாரம் ஒரு iPod பரிசாக வழங்கப்படும்.




விஜய் – TOP NEWS

இவ்வார கூப்பன் (07.08.2013)

.........................................................

விடை: ...................................................

பெயர்: ..................................................

வீட்டு முகவரி: .......................................

.........................................................

பாடசாலை முகவரி: ..................................

.........................................................

வயது: ...................................................

தொ.பே.இல: ............................................

அனுப்ப வேண்டிய முகவரி:

iPod பரிசுப் போட்டி,
'விஜய்'
த.பெ.இல: 2037,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றுக்கொள்!



பூக்களைப் பார்த்து சிரிப்பைக் கற்றுக்கொள்!
நாய்களைப் பார்த்து நன்றியைக் கற்றுக்கொள்!
எறும்புகளைப் பார்த்து உழைப்பைக் கற்றுக்கொள்!
காகத்தைப் பார்த்து ஒற்றுமையைக் கற்றுக்கொள்!
அலையைப் பார்த்து முயற்சியைக் கற்றுக்கொள்!
கொக்குகளைப் பார்த்து பொறுமையைக் கற்றுக்கொள்!
தேனீக்களைப் பார்த்து சுறுசுறுப்பைக் கற்றுக்கொள்!

எச்.எஃப்.அஸ்மா,
மா/அஜ்மீர் தே.பாட., உக்குவலை.

# அறிந்துகொள்ளுங்கள்

★ இலங்கையில் பாடசாலைச் சீருடை விநியோகிக்கப்பட்ட ஆண்டு எது? **1993**

★ 1840 ஆம் ஆண்டு உலகில் முதன்முதலில் வெளியிடப் பட்ட முத்திரையின் பெயர் என்ன? **Penny Black**

★ இலங்கையில் 'லங்கா ஷேக்ஸ்பியர்' என்ற சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்படுபவர் யார்? **ஜோன் டி சில்வா**

★ பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் முதலாவது தலைவரின் பெயர் என்ன? **பேராசிரியர் ஸ்டெென்லி கல்பகே**

# உங்களுக்குத் தெரியுமா?

★ புவியில் முதன்முதலில் உயிரினங்கள் தோன்றிய இடம் - கடல்

★ மிக வேகமாக ஓடும் விலங்கு - சிறுத்தை

★ அதிக வருடங்கள் உயிர்வாழும் பிராணி - ஆமை


★ சமூக வாழ்க்கையை விரும்புகின்ற சமுதாய வாழிகள் - தேனீ, எறும்பு, கறையான், குளவி

★ பற்கள் மீண்டும் மீண்டும் விழுந்து முளைக்கும் பிராணி - முதலை

★ ஒருசோடி வெட்டும் பற்கள் தந்தங்களாகத் திரிபடைந்திருக்கும் பிராணி - யானை, பன்றி

பாத்திமா கதீஜா,
கனேத்தன்னை மதீனா
மு.ம.வித்.,ஹிங்குளை.

# குதிரை வடிவ மீனினம் - கடற்குதிரை



கடற்குதிரை கடலில் வாழும் ஒரு மீனினமாகும். இது குதிரைத் தலையை ஒத்ததாக காணப்படுவதுடன், கூடவே செதில்களும் துடுப்புகளும் அவற்றில் காணப்படுகின்றன. எனினும், இது மீனைப்போன்ற தோற்றமுடையதல்ல. பூமியில் உள்ள முழுக்கடற் பரப்பிலும் 32 வகையான கடற்குதிரை இனங்கள் வாழ்கின்றன. வட அமெரிக்காவில் இருந்து தென் அமெரிக்கா வரையுள்ள பசுபிக் கடற்பரப்பில் இவை அதிகளவில் காணப்படுகின்றன. இவை வெப்பமான நீர்ப் பிரதேசங்களில் வாழ்வதற்கு விருப்பைக் காட்டுவதுடன், விசேடமாக மூடப்பட்ட நீர்த் தாவரங்கள், முருகைக் கற்பாறைகள், சதுப்பு நிலங்கள் போன்ற நிழலான சூழலில் வாழ்கின்றன.

கடற்குதிரைகள் நீந்துவதற்கு வயிற்றுப்புற இடுப்புச் செட்டைகளைக் குறைவாகவே பயன்படுத்துகின்றன. இச் செட்டைகளை எந்நேரமும் அசைத்தபடி வைத்திருக்கின்றன. என்புள்ள மீனினமாயின், வெளிப்புறமாகத் தடித்த செதில்கள் காணப்படுகின்றன. உடல் நீண்ட தாடையுடன் கூடிய முக அமைப்பு உணவு உட்கொள்ளலில் முக்கிய இடம் வகிக்கின்றது. சிறிய மீன்கள், கூனி இறால்கள், தாவரப் பிளாந்தன்கள் போன்றவற்றை உணவாகக் கொள்கின்றன. இது ஓர் அனைத்துமுண்ணியாகும்.

ஏ.ஆர்.எம்.ரஸ்மி, ப/வெளிமடை மு.ம.வித்., வெளிமடை.

# உண்மையான நட்பு




அந்தக் காட்டில் ஓங்கி வளர்ந்த மரங்கள், செடி-கொடிகள் அடர்ந்து காணப்பட்டன. மேலும் பல வகையான இயற்கைத் தாவரங்கள் மற்றும் விலங்குகளும் இருந்தன. அங்கு ஒரு நரியும் ஓநாயும் அருகருகேயான குகையினுள் இனிதே வாழ்ந்து வந்தன. ஓநாய் நரியுடன் மிக நட்புடனேயே பழகியது. ஆனால், நரியோ, ஓநாயை தன் பகைவன் போலவே கருதியது. ஓநாய் எப்பொழுதும் நரியுடன் நல்ல எண்ணத்துடன் பேச வந்தாலும் நரியோ அகங்காரத்துடன் பேசியது. இதனால், ஓநாயும் கவலை கொண்டது. ஒரு நாள் நரி காட்டுக்குள் சென்று தன்னுடைய குகைக்குத் திரும்புகையில், அதன் குகைக்குள்ளிருந்து சிங்கமொன்று வெளியேறுவதைக் கண்டது. இதனால், அந்த நரி செய்வதறியாது திகைத்து நின்றது.



நரியின் குகை வாயில் பெரியது. இதனால், அங்கு பிற மிருங்கள் தடையின்றி வந்துபோயின. ஆனால், ஓநாயின் குகை வாயிலோ சிறியது. இதனால், வேறு மிருகங்களால் அதன் குகைக்குள் நுழைய முடியாதிருந்தது.

நாட்கள் செல்லச் செல்ல நரியின் குகைக்குள் அந்தச் சிங்கம் வந்து குடியமர்ந்துகொண்டது. இதனால், சிங்கத்தின்மீது அச்சம் கொண்ட நரி அங்கிருந்து வெளியேறி தங்க இடம் இன்றித் தவித்தது. அந்த அடர்ந்த காட்டில் கடுமையான மழைவேறு பெய்யத் தொடங்கியதால், நரியும் குளிரில் கடும் அல்லல் பட்டு நோய்வாய்ப்பட்டது. நரியின் கஷ்டமும் தங்க இருப்பிடமின்றித் தவிக்கின்றமை பற்றிய செய்தியும் காடு முழுவதும் பரவியது. ஆனபோதிலும், எந்த மிருகமும் நரியைப் பார்க்க வரவில்லை. மாறாக, ஓநாய் நரியைப் பார்க்க வந்து நலம் விசாரித்தது. அப்போதுதான் நரி ஓநாயின் உண்மைப் பாசத்தை அறிந்துகொண்டது. ஓநாயின் அழைப்பினை ஏற்று நரி, ஓநாயின் குகைக்குச் சென்றது. ஓநாயும் நரியின் நோயைத் தனது வைத்தியத்தால் குணப்படுத்தியது. அன்றிலிருந்து நரியும் ஓநாயும் இணைபிரியாத நண்பர்களாக அக்காட்டில் வாழ்ந்து வந்தன.

நஸார் பாத்திமா அனாத்,
தி/கிண்ணியா
இஹ்ஸானியா ம.வித்.,

# வியத்தகு தகவல்கள் சில...

★ மனிதனது முகத்தில் 14 எலும்புகள் உள்ளன.

★ மனித மூளையில் 06 கிராம் தாமிரம் உள்ளது.

★ ஒரு மனிதனின் உடலிலுள்ள நரம்புகளின் மொத்த நீளம் சுமார் 72 மீற்றர் ஆகும்.

★ நமது குருதி ஒரு நாளில் 30 கோடி கி.மீற்றர் பயணம் செய்கிறது.

★ நுரையீரல் ஒரு நாளைக்கு 23,040 தடவைகள் சுவாசத்தை உள்ளெடுத்து வெளிச் செலுத்துகின்றது.

★ மனித நாக்கில் உள்ள சுவை அறியும் செல்களின் எண்ணிக்கை சுமார் மூவாயிரம் ஆகும்.

இக்பால், அல்-அஸ்ஹர் மு.ம.வித்., ஹெம்மாதகமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1

குழம்பியுள்ள எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி சரியான சொல்லை எழுதுக


g a p e r


o y t


e r o s


e b d


i g r e t


## 2

கீழுள்ள சொற்களை எழுத்துக்கூட்டத்திற்குள் இனங்கண்டு நிறந்தீட்டுக




| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| r | s | h | e | e | p | t | w | z | j | i | g |
| d | i | c | h | n | n | s | c | w | j | d | t |
| o | n | h | k | h | t | h | u | u | v | b | i |
| g | h | i | p | f | n | b | m | p | k | k | j |
| v | h | c | q | g | g | d | e | i | f | f | k |
| o | e | k | s | o | o | u | q | g | f | g | q |
| m | x | e | o | o | a | c | i | k | h | k | p |
| z | g | n | f | s | t | k | c | f | z | z | c |
| x | q | h | g | e | l | h | o | r | s | e | w |
| d | w | c | a | t | j | h | j | c | v | a | r |
| o | s | i | s | b | d | o | s | n | j | q | l |
| u | a | l | h | f | x | u | k | c | o | w | j |

goat pig horse
cow cat sheep chicken
dog duck goose



## அறிவுக்கு விருந்து - 426 விடைகள்

போட்டி: 02




போட்டி: 03



போட்டி: 04

தா, தாரை, தாயம், தாமரை, தாவணி, தாம், தார், ஆ, ஆதாம், ஆயர், ஆதாயம், ஆயம், ஆவணி, ஆம், ஆணி, ஆரை, மர்மம், மணி, மரை, வரை

போட்டி: 05

1. அன்பு - பாசம்
2. கை - கரம்
3. வயல் - கழனி
4. சூரியன் - ஞாயிறு
5. நீர் - புனல்





தயாரிப்பு - ஸாரா

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2013.08.14 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 429
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


## குறுக்கெழுத்துப் போட்டி இல. 45

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| | 2 | | 3 | | 4 |
| | | 5 | | | |
| 6 | | | | | 7 |
| | | | | 8 | |
| | | | 9 | | |

### மேலிருந்து கீழ்

01. செங்கல், பானை என்பன செய்யும் இடம்.
02. கொடிய மீனினமொன்று. (தலைகீழ்)
03. ஜலதோஷம். (தலைகீழ்)
04. சவத்தை இதில் வைத்தும் கொண்டுசெல்வர். (தலைகீழ்)
05. கலசம்.
06. வெட்கம்.
07. மருந்தாகவும் உணவாகவும் பயன்படும்.
08. மண்டையோடு. (தலைகீழ்)


### இடமிருந்து வலம்


01. 'சூறைக்காற்று' என்றும் கூறுவர்.
02. பலாக்காயின் சதைப்பகுதி இவ்வாறு அழைக்கப்படும். (மாறியுள்ளது)
03. ஒருவகை அரிசி.
07. ராகங்களில் ஒன்று. (மாறியுள்ளது)
08. ஐம்பொறிகளில் ஒன்று.
09. தூண். (மாறியுள்ளது)


### குறுக்கெழுத்துப் போட்டி இல. 44 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | 2 ரு | ந் | 3 த | 4 தி | |
| 5 மா | சி | | 6 வி | சை | |
| வா | | 7 வ | டு | | 8 வ |
| 9 சை | 10 கை | | | 11 தோ | ணி |
| | ப் | | ளி | ள் | 12 க |
| | பு | ப் | 13 உ | | ம் |

## 3 எத்தனை உள்ளன?

1.  6

2. 

3. 

4. 

5. 

6. 

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 426 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

போட்டி: 01
எம்.தானிஸ், அட்டாளைச்சேனை -06.

போட்டி: 02
றொ.அபிஷேக், நல்லூர்.

போட்டி: 03
எஃப்.முபஸ்ஸரா, உக்குவளை.

போட்டி: 04
ஏ.வாசவி, அரியாலை.

போட்டி: 05
எஃப்.ஸஹ்ரினா, தும்மோதர.

பாராட்டுப் பெறுவோர்:

* எஃப்.ஹனா, தாராபுரம்.
* க.அஜந்தன், கொழும்பு-04.
* தி.கோபிகா, தோணிக்கல்.
* எம்.ரஷாத், கண்டி.
* சு.அபிநயா, ஹப்புத்தளை.
* எம்.ஸஹத், வெலிபென்ன.
* ஸீனதுல் வஸ்னா, மருதானை.
* என்.சதீஷ், உவர்மலை.
* எஸ்.நிவேதா, கந்தப்பளை.
* ஏ.பாத்திமா, பெரியமுல்லை.

## 5 விடை தருக



உலகின் மிக நீளமான நதிகள் இரண்டில் இதுவும் ஒன்று. அந்தீஸ் மலையில் ஊற்றெடுத்து பெரு, ஈக்வடோர், கொலம்பியா, பிரேசில் ஆகிய நாடுகளை ஊடறுத்து இது பாய்கின்றது. இந்த நதி கொண்டிருக்கும் நீர்க்கொள்ளளவு, ஏனைய நதிகளைவிட மிகவும் அதிகமாகும். இது ஆயிரத்திற்கும் மேற்பட்ட துணை நதிகளைக் கொண்டது. இந்த நதி எந்தவோர் இடத்திலும் பாலம் மூலம் கடக்கப்படுவதில்லை. இதன் பெரும்பகுதி வெப்பமண்டல மழைக்காடுகள் வழியாகப் பாய்வதாலும் அங்கு சில நகரங்களே உள்ளதாலும் இதன் குறுக்கே பாலத்தின் தேவை உணரப்படவில்லை என்றே கூறப்படுகின்றது. இந்த நதியின் பெயர் யாது? அடைப்புக்குறிக்குள் உள்ள விடைகளில் பொருத்தமானதைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

(கொங்கோ/அமேசன்/நைல்) ..............................

## 4 சரியான விடையில் கோடிடுக

அ) 24 - CCIV/ XXIV/ XXVI
ஆ) 50 - M/ XL/ L
இ) 1005 - DL/ MV/ DV
ஈ) 512 - DXII/ LXII/ DLXII

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'சுவிற்சர்லாந்து ஸ்கெட் பவுண்டேஷன்' அமைப்பினால் 06-12 வயதுப் பிரிவினருக்கான உதைப்பந்தாட்ட அடிப்படைப் பயிற்சி வழங்கல் தொடர்பான பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது. அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட இளைஞர், யுவதிகளுக்கான 08 நாள் பயிற்சிகள் இரண்டு கட்டங்களாக மட்டக்களப்பு கொக்குத்தீவு, அம்பாறை மருதமுனை ஆகிய பகுதிகளில் இடம்பெற்றன. (படமும் தகவலும்: மருதமுனை றாசீக் நபாயிஸ்)



தெமட்டகொடையைச் சேர்ந்த சாந்தகுமார்-இந்திராணி தம்பதியரின் செல்வப் புதல்வன் அம்ரித், தனது ஐந்தாவது பிறந்தநாளை 11.08.2013 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் அம்பாள் அருளில் பல்கலையும் கற்று பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.




கிண்ணியா ஈச்சந்தீவைச் சேர்ந்த சிவசங்கர்-பிரியதர்ஷினி தம்பதியரின் செல்வப் புதல்வி அமிழ்தினி, தனது மூன்றாவது பிறந்தநாளை 04.08.2013 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் அருள்பெற்று பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



மார்க் ஜோசப்,
புனித அந்தோனியார் கல்.,
கட்டுகஸ்தோட்டை.




ஜெ.ஜெயகிறிஸ்டி,
ஆனந்தபுரி பிரதான வீதி,
திருகோணமலை.




பு.பொஸரீன்,
சென்.ஜோன்ஸ் கல்.,
யாழ்ப்பாணம்.



ப.பிரியா,
ஹல்வதுரை தமிழ் வித்.,
ஹல்வதுரை.



எம்.ஹஸ்மின்,
முஸ்லிம் ம.வித்.,
ஈத்தல் வெட்டுனு வெவ.



ஜோன் பிரசன்னா,
யாழ். மத்திய கல்.,
யாழ்ப்பாணம்.



உ.அஜித்,
இணுவில் மத்திய கல்.,
இணுவில்.

# உலகப் புகழ்பெற்ற ஓவியர்கள் சிலர்...


## வசிலி கன்டின்ஸ்கி (1866-1944)



வசிலி கன்டின்ஸ்கி (Wassily Kandinsky), ரஷ்ய நாட்டு ஓவியராவார். இவர், 1866 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி (4 ஆம் திகதி என்றும் ஒரு கருத்து உள்ளது) ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் பிறந்தார். இருபதாம் நூற்றாண்டின் பிரபலமான ஓவியர்களுள் வசிலியும் ஒருவர். நவீன பண்புரு ஓவியங்கள் (abstract art), அகவுணர்ச்சி வெளியீட்டு ஓவியங்கள் (Expressionism) ஆகியவற்றை வரைந்தவராகக் கருதப்படுகின்றார்.

இவர் தனது முப்பதாவது வயதில் ஓவியக் கல்வியைத் தொடங்கினார். 1896 இல் ஜேர்மனியின் மியூனிச்சில் வாழ்ந்தபோது, மியூனிச் நுண்கலைகள் எக்கடமியில் கற்றார். 1918 இல் மொஸ்கோவுக்குத் திரும்பினார். அங்கு ஆட்சியாளரின் அதிகாரபூர்வக் கலைக் கோட்பாடுகளோடு இவருக்கு முரண்பாடுகள் ஏற்பட்டதால், 1921 இல் மீண்டும் ஜேர்மனி சென்றார். அங்குள்ள பவ்ஹவ்ஸ் எனும் கைவினை மற்றும் நுண்கலைப் பாடசாலையில் 1922 முதல் 1933 வரை ஓவியம் கற்பித்தார். பின்னர், அங்கிருந்து பிரான்ஸிற்குச் சென்றார். 1933 ஆம் ஆண்டில் அந்நாட்டின் குடியுரிமையை வசிலி பெற்றுக்கொண்டார். மரணிக்கும் வரை தனது வாழ்வின் எஞ்சிய பகுதியை அங்கேயே கழித்தார்.

தான் சிறுவனாக இருந்தபோது, நிறங்கள் தொடர்பில் வழமைக்கு மாறாக ஈர்க்கப்பட்டதாக வசிலி குறிப்பிட்டுள்ளார். சிறிய ரேகைகள்மூலம் ஓவியத்தில் தடித்த வெளிப்புறங்களையும் வரைந்துள்ளார். கணித முறைப்படி ரேகைகளைக் கையாண்டு அசையும் தன்மையை வெளிப்படுத்தும் வகையிலான ஓவியங்களையும் வரைந்துள்ளார். On White II, Garden Of Love II, நீலநிற பந்தயவீரன், புனித உர்சுலா தேவாலயத்துடன் மியூனிச் ஸ்ச்வாபிங், ஒரு கிராமத்து வீதி உட்பட, மேலும் பல ஓவியங்கள் இவரால் வரையப்பட்டுள்ளன. இவர், 1944 டிசம்பர் 13 ஆம் திகதி தனது 77 ஆவது வயதில் காலமானார்.



On White II



ஒரு கிராமத்து வீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றலில் மனக்கட்டுப்பாட்டின் முக்கியத்துவம்



எந்த விடயத்தையும் ஒருநிலையுடன் செய்து முடிக்க 'மனக்கட்டுப்பாடு' அவசியம். கற்றலின்போது, மனம் என்பது அங்குமிங்கும் அலைபாய்ந்து கொண்டிருக்கக்கூடாது. அவ்வாறு இருப்பின், கற்றல் நடவடிக்கைகளை பூரணமாக செய்திட முடியாமல் போய்விடக்கூடும்.

ஆகவே, எமது சிந்தனையை நேரானதாக மாற்றியமைத்துக்கொள்ள எம்முடைய மனம் ஒரு கட்டுப்பாட்டிற்குள் நின்று, அதன் விடயங்களைச் செய்ய வேண்டும்.

கற்றலுக்கு அறிவு அவசியம் என்பது போன்றே, அந்த அறிவைப் பயன்படுத்த மனம் சீரானதாகவும் ஓர் எல்லைக்குள் நின்று இயங்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும். மனதை ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைக்கும்போதுதான், எதனையும் பகுத்தாராய்ந்து செய்யக்கூடிய மனநிலை தோன்றும்.





மாணவப் பருவம் என்பதும் பல்கலைக்கழகப் பருவம் என்பதும் வாழ்வில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய கட்டங்களாகும்.



இப்பருவங்களில் எங்கு-என்ன நடந்தாலும் எமது குறிக்கோளை விட்டு ஒருபோதும் பின்வாங்கக் கூடாது. எந்தளவுக்கு நம் மனதை ஒரு கட்டுப்பாட்டுடன் வைத்துக்கொள்கின்றோமோ, அதே அளவுக்கு எமது முயற்சியில் ஊக்கமும் உயர்ச்சியும் காணப்படும்.

இதேவேளை, நாம் பல்வேறு பண்புகளை, நடத்தைகளை உடைய மனிதர்களோடு பழகுகின்றோம்; சந்திக்கின்றோம். ஏதோ ஒரு தேவைக்காக அவர்களது உறவு அவசியம். எனினும், அவர்களிடம் ஏதேனும் தீய பண்புகள் இருப்பின், அவற்றை நாம் கற்றுவிடக்கூடாது. மாறாக, மனக்கட்டுப்பாட்டுடன் செயற்பட வேண்டும். அப்போதுதான், கற்றலில் உரிய இலக்கை அடைய முடியும்.

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**

# ராட்சத எரிகல்லொன்று சந்திரனில் வீழ்ந்தது...

சந்திரனின் மீது எரிகல் மோதியபோது வெளிப்பட்ட ஒளியானது, தொலைநோக்கி ஒன்றில் தெரிந்தவிதமே அம்புக்குறியிட்டுக் காட்டப்பட்டுள்ளது.



நாஸா நிறுவனத்தின் லூனா மதிப்பீட்டு வேலைத்திட்டத்தின் மூலம் சந்திரன்மீது விழுந்த நூற்றுக்கணக்கான எரிகற்கள் குறித்து மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, அவை விழுந்த இடங்கள் இப்படத்தில் இலக்கமிடப்பட்டுள்ளன. அவற்றில் மிகவும் பிரகாசமான எரிகல் விழுந்த இடமே சிவப்பு நிறப்புள்ளியால் குறித்துக் காட்டப்பட்டுள்ளது.

அண்மையில் சுமார் 40 கிலோ கிராம் நிறையுள்ள எரிகல்லொன்று சந்திரனின் மேற்பரப்பில் விழுந்துள்ளது. அந்த எரிகல் மோதலினால் எழுந்த பிரகாசமான ஒளியினை பூமியிலிருந்தும் அவதானிக்கக்கூடியதாக இருந்ததாக நாஸா அறிவித்துள்ளது. அந்தவகையில், இதுவரை அவதானிக்கப்பட்ட மிகப்பெரிய எரிகல் மோதலாக இது கருதப்படுகின்றது. சந்திரனுக்கு அனுப்பிய தொலைநோக்கி ஒன்றே இதனை முதன்முதலில் கண்டுபிடித்தது. நாஸா நிறுவனமானது, இதுவரை இதுபோன்ற 300 இற்கும் மேற்பட்ட எரிகல் மோதல்கள் குறித்து அறிக்கை சமர்ப்பித்துள்ளது. அவற்றில் இதுவே மிகப்பெரிய எரிகல் மோதலாகும்.

குறித்த எரிகல்லானது, சந்திரன் மீது விழுந்த கணப்பொழுதில் அது வெடித்துச் சிதறியது. "நாம் இதுவரை பார்த்த எரிகல் மோதலின்போது வெளிப்பட்ட பிரகாசமான ஒளியைவிட, பத்துமடங்கு அதிகமான ஒளியை இந்த எரிகல் மோதலின்போது அவதானிக்கக்கூடியதாக இருந்தது" என நாஸா நிறுவனத்தைச் சேர்ந்த மார்ஷல் விண்வெளி மத்தியநிலையத்தின் எரிகல் தொடர்பிலான சூழல் அலுவலக அதிகாரியான பில் குக் தெரிவிக்கின்றார்.



சந்திரனை வலம் வரக்கூடிய செய்மதி ஒன்றை நாஸா நிறுவனம் தற்போதளவில் அனுப்பியுள்ளது. அதன்மூலம் அண்மையில் நிகழ்ந்த மோதலினால் சந்திரனின் மேற்பரப்பில் புதிதாக ஏற்பட்டுள்ள பாரிய கிடங்கு பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றது. விஞ்ஞானிகளின் கூற்றுப்படி; இந்தக் கிடங்கானது, 20 மீற்றர் அளவு விட்டமுடையதாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

எவ்வாறாயினும், நிரந்தரமாகவே சந்திரனை நோக்கி அனுப்பப்பட்டுள்ள தொலைநோக்கிகளின்மூலம் இம்மோதல் குறித்துப் பெறப்பட்ட டிஜிட்டல் படப்பிடிப்பினைப் பார்த்த விஞ்ஞானிகள், இந்த எரிகல்லானது, ஒரு அடி (0.3 மீற்றர்) அளவு விட்டத்தைக் கொண்டது எனக் கூறுகின்றனர். குறித்த எரிகல்லானது, மணித்தியாலத்திற்கு 56,000 மைல் வேகத்தில் சென்று சந்திரன் மீது விழுந்திருக்கலாம் எனவும் அதனால் ஏற்பட்ட வெடிப்பானது, 5 TNT தொன் ஏற்படுத்தும் வெடிப்பிற்கு சமனானது என்றும் அவர்கள் கருதுகின்றனர். இதேவேளை, சந்திரனில் இந்த நிகழ்வு இடம்பெற்ற தினத்தில், புவிக்கருகில் ஏராளமான எரிகற்கள் தென்பட்டுள்ளதோடு, அவை புவியின் வளிமண்டலத்தை ஊடறுத்தபோது வெடித்துச் சிதறியமை கெமராக்களில் படம்பிடிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.


**இரஞ்சித் ஜெயகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பரிமாண அச்சு தொழில்நுட்பம்

# 3D Printing

## இது மூன்றாவது தொழில்நுட்ப புரட்சியாகும்




உலகம் முழுவதும் பரவலாகப் பேசப்படும் புதிய விடயமாக முப்பரிமாண அச்சு தொழில்நுட்பம் உள்ளது எனலாம். இன்றைக்கு சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த அச்சு தொழில்நுட்பத்தினை உலகுக்கு அறிமுகம் செய்திருந்தாலும், அதற்கான அதிக செலவீனம் காரணமாக இத்தொழில்நுட்பம் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடையவில்லை. ஆனால், இன்று தொழில்நுட்பத்தின் முன்னேற்றம் காரணமாக அச்சு தொழில்நுட்பம் மக்கள் மத்தியில் மிக வேகமாக பிரபல்யம் அடைந்து வருகின்றது. இது இலகு பொருள் உற்பத்தி செயன்முறையாகும். முப்பரிமாண அச்சு என்பது Additive Manufacturing எனப்படுகின்றது. இதன் எதிர்ப்பொருள் Subtractive Manufacturing என்பதாகும். Subtractive உற்பத்தி என்பது ஒரு பொருளை தேவையான விதத்தில் கைகளால் வெட்டி துண்டுகளாக்கி ஒரு வடிவமாகத் தயாரித்துக்கொள்வதாகும். ஆனால், Additive உற்பத்தி என்பது தொகுதி தொகுதிகளாக வடிவத்திற்கு ஏற்ப பொருளின் வடிவத்தினைப் பெறுவதாகும். பின்வரும் காலங்களில் சிறந்த பயன்பாட்டைத் தரவுள்ள இந்த தொழில்நுட்பத்தில் சிக்கல்களும் நிறைந்துள்ளன.

முன்னேற்ற தரத்தில் அதிகூடிய பாரியளவிலான பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய முப்பரிமாண அச்சுப்பொறி.

**01** கணினியில் உள்ள 'முப்பரிமாண காட்சி மென்பொருள்' எனப்படும் CAD (Computer Aided Design) மென்பொருளைப் பயன்படுத்தி அடிப்படை வடிவம் பெறப்படுகின்றது. அல்லது முப்பரிமாண ஸ்கேனரின் உதவியுடன் அந்த குறிப்பிட்ட பொருளை ஸ்கேன் செய்து அதன் எண்முறை (Digital) தரவுகள் அனைத்தையும் கணினிக்குப் பெற்றுக்கொடுக்கும் செயற்பாடே இங்கு நடைபெறுகின்றது.

சிறந்த பலனைப் பெறுவதற்கு உதவும் சிறப்புக் கணினி மென்பொருட்கள் உள்ளன.




**02** பெறப்பட்ட முப்பரிமாண வடிவத்தின் எண்முறை தரவுகள் அனைத்தும் முப்பரிமாண அச்சுப்பொறிக்கு (Printer) வழங்கப்படுகின்றது. இவற்றுள் பலதரப்பட்ட மூலப்பொருட்களை அதாவது, சுமார் 120 அளவில் பயன்படுத்தும் அச்சுப்பொறி ரகங்களும் உள்ளன. இவற்றில் ஒரே தடவையில் மூலப்பொருட்கள் சிலவற்றைப் பயன்படுத்தி பொருட்களை உற்பத்தி செய்யும் ஆற்றலும் இதற்குண்டு.

**03** அச்சு தொழிற்துறையில் பயன்படுத்தப்படும் சாதாரண மை அச்சுப்பொறி (inkjet printer) செயற்படுவதனைப் போன்று இதுவும் செயற்படுகின்றது. ஊடுருவும் ஒளி மற்றும் மூலப்பொருள் பயணிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு பகுதியும் தயாராகின்றது. கீழிருந்து மேல் நோக்கி வடிவங்கள் தயாராகின்றன.

**300%**

2020 ஆம் ஆண்டில் முப்பரிமாண அச்சு தொழில்நுட்பம் முன்னேறும் என்று கருதப்படும் சதவீதம் இதுவாகும்.

முப்பரிமாண அச்சு தொழில்நுட்பத்தின் பெறுமதி (அ.டொ.பில்லியன்)

| 1.3 | 3.1 | 5.2 |
|---|---|---|
| 2012 ஆம் ஆண்டில் | 2016 ஆம் ஆண்டில் | 2020 ஆம் ஆண்டில் |

**04** உற்பத்தி செய்யப்பட வேண்டிய வடிவத்திற்காக செலவாகும் நேரம் அதன் அளவின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. இதில் இயந்திரத்தின் ஆற்றலும் செயற்பாடும் முக்கியத்துவம் பெறுகின்றது.

உற்பத்தி செய்யப்பட்ட இறுதி வடிவம் இவ்வாறு காணப்படும்.



**1984** அமெரிக்கரான சார்ள்ஸ் ஹல முப்பரிமாண அச்சு தொழில்நுட்பத்தினை உலகுக்கு அறிமுகப்படுத்தினார்.

**1986** முப்பரிமாண அச்சுப்பொறிக்கான காப்புரிமை (Copy Right) பெறப்பட்டது.

**1988** முப்பரிமாண அச்சு தொழில்நுட்பம் மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றது.

**1990** முதலாவது செலவு குறைந்த ரகம் சந்தையில் விற்பனைக்கு வந்தது.

**2006** முதலாவது Self Replicating முப்பரிமாண அச்சுப்பொறி தயாரிக்கப்பட்டது.

**2008** முதலாவது தானியங்கி Replicating அச்சுப்பொறி சந்தைக்கு விற்பனைக்கு வந்தது.

**2009** 'ஸ்கல்ப்டஓ' என்ற பெயரில் நிறுவனம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. பிரதிமை உருவாக்கும் வர்த்தக மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

**2014** முப்பரிமாண அச்சு தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி, வீடு ஒன்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.



### முப்பரிமாண அச்சு இயந்திர ரகங்கள்

இந்த அச்சு இந்திரங்கள் பல விலைகளில் கிடைக்கின்றன.

| சாதாரண ரகம் | வணிக ரகம் | தொழிற்சாலை ரகம் |
|---|---|---|
| $ 500 – 2,000 | $ 10,000 – 20,000 | $ 60,000 – 100,000 |

இந்த விலைகள் அனைத்தும் அமெரிக்க டொலர்களில் உள்ளன. எதிர்காலத்தில் முப்பரிமாண அச்சு இயந்திரத்தின் விலைகள் படிப்படியாகக் குறைவடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி, இதன் உற்பத்தி முன்னரைவிட அதிகரிக்கக்கூடும்.



சாதாரண முப்பரிமாண அச்சுப்பொறி

### முப்பரிமாண அச்சுப் பொறியின் நன்மைகள்

வெளியேறும் மூலப்பொருட்களின் அளவு குறைதல், சூழலுக்கு ஏற்புடையது, குறைந்த விலையில் உற்பத்திசெய்யக்கூடியது, மனிதகலங்களைப் பெறுவதற்கு வழங்குனர் தேவையில்லை. மூலப்பிரதி படைப்பின்போது, உற்பத்தியாளருக்கு ஏற்படும் செலவீனம் குறைதல், மருத்துவ மாணவர்களுக்குத் தேவையான உறுப்புகளைத் தயாரித்துக்கொள்ளல்.

* முப்பரிமாண அச்சுப்பதிப்பு இயந்திரத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள பொருட்கள் சில. (இதற்கென ப்ளாஸ்டிக் மற்றும் மெழுகு என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.)

### முப்பரிமாண அச்சுப்பதிவுக்கு தேவையான மூலப்பொருட்கள்

சாதாரண அச்சுப்பொறியைப் போன்று மை பயன்படுத்தப்படுவதில்லை. கீழ்வரும் மூலப்பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

| | |
|---|---|
| ப்ளாஸ்டிக் | கண்ணாடி |
| உலோகம் | பொலிமர் |
| மனிதக் கலங்கள் | மெழுகு |
| உண்ணக்கூடிய உணவுகள் | |
| மணல் மற்றும் மெலியம் | |

### பயன்படுத்தக்கூடிய துறைகள்

முப்பரிமாண அச்சுப்பதிப்பு ஊடாக உலகின் அனைத்து துறைகளிலும் புதிய வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

**உணவு உற்பத்தி**

உண்ணக்கூடிய ஆகாரங்களை உற்பத்தி செய்தல்.

**மருந்துகள் உற்பத்தி**

மனித கலங்கள், இந்திரியங்கள், இரத்தக் குழாய்கள் என்பனவற்றை தேவையான விதத்தில் செயற்கையாக உருவாக்கிக் கொள்ள முடியும்.

**அன்றாட பொருட்கள் உற்பத்தி**

தனக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்தல்.



### முப்பரிமாண துப்பாக்கி

உலகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் முப்பரிமாண தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி கடந்த மே மாதம் துப்பாக்கி ஒன்று தயாரிக்கப்பட்டது. கோட் வில்சனால் உருவாக்கப்பட்ட இந்த துப்பாக்கியில் பலதரப்பட்ட பதினொரு வகையான ப்ளாஸ்டிக் பகுதிகள் பொருத்தப்பட்டுள்ளன. துப்பாக்கி ரவை வெளியேறும் பகுதியில் இரும்பு ஆணி உள்ளது. அமெரிக்க அரசாங்கம் இதனைத் தடைசெய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 ஆவது உலக சாரணர் ஜம்போரி - 1951

**7 ஆவது உலக சாரணர் ஜம்போரி - 1951**
**ஒஸ்ட்ரியா**

12,884 சாரணர்கள்

61 நாடுகள்




Bad Ischl

ஒகஸ்ட் 3- 12

ஒஸ்ட்ரியா நாட்டின் Bad Ischl என்ற இடத்தில் ஏழாவது உலக சாரணர் ஜம்போரி நடைபெற்றது. இதில் 61 நாடுகளைச் சேர்ந்த 12,884 சாரணர்கள் கலந்துகொண்டனர். 'எளிமை' யை வலியுறுத்தும் விதமாக இந்த ஜம்போரி அமைந்திருந்தது. ஏழாவது உலக ஜம்போரியினை நினைவூட்டும் முகமாக ஏழு கோபுரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கோபுரத்திற்கும் பெயர் சூட்டப்பட்டு, ஒரு கோபுரத்தின் உச்சியில்




ஜம்போரி கொடி ஏற்றப்பட்டு ஜம்போரி பாடல் பாடப்பட்டது.


முதன்முதலாக ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த சாரணர்கள் கலந்துகொண்டமை இதன் சிறப்பாகும். அத்துடன், உலக அமைப்பின் அனைத்து உறுப்பு நாடுகளிலிருந்தும் சாரணர்கள் கலந்துகொண்டனர்.

தாய்மொழியான ஜப்பானிய மொழியைத்தவிர,









வேறு மொழி அறியாத ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஒரே ஒரு சாரணன், 'ஜம்போரி' என்ற ஓர் ஆங்கிலச் சொல்லை மட்டுமே அறிந்து, பேசி எவ்வித சிக்கலுமின்றி ஒஸ்ட்ரிய விமான நிலையத்தில் வந்திறங்கினான். அந்த சாரணனை, அனைத்து சாரணர்களும் கொடியசைத்து சரியான இடத்திற்கு வந்ததைப் பாராட்டி மகிழ்ந்தனர். ஜம்போரி சின்னமாக Jew's Harp (ஹீப்ரு இசைக்கருவி) அறிவிக்கப்பட்டது. இது ஹீப்ரு இனமக்கள் பயன்படுத்திய சிறிய இசைக்கருவி, இந்தியாவில் உள்ள 'மோர்சிங்' இசைக்கருவியைப் போன்ற அமைப்புக் கொண்டது. இங்கிலாந்து நாட்டிலிருந்து 3,000 சாரணர்கள் கலந்துகொண்டமை இந்த ஜம்போரியின் இன்னொரு சிறப்பம்சமாகும்.

தொகுப்பு: ஜனாதிபதி சாரணன் **யோ.கேதீசன்**
SLTS BP.A.WB(SL). IAP (India)




# சாரணர் பக்கத்திற்கு அதிபர் வாழ்த்து!

மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் ஊடகங்களின் பங்களிப்பு இன்றியமையாதவை. அதிலும், நாடு முழுவதும் மாணவர்கள் பயன் அடையத்தக்க பயனுள்ள பல விடயங்களை உள்ளடக்கியதாக மாணவர் கல்வி சார்ந்த பத்திரிகையாக வெளிவரும் 'விஜய்' பத்திரிகைக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

இதுவரையில் வேறு பத்திரிகைகளில் முன்னெடுக்கப்படாத விடயமாக 'சாரணர் உலகம்' எனும் சாரணர் சம்பந்தப்பட்ட பக்கமானது, தமிழ் பேசும் சாரணர்களுக்குத் தேவையான ஒரு சிறப்பான சேவையாகும். இச்சேவைக்கு எனதும் கல்லூரிச் சமூகத்தினது சார்பாகவும் பாராட்டுக்களும் நன்றிகளும் உரித்தாகுக.



திரு.சி.தனஞ்சயன் - அதிபர்,
யா/வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி.

## ராணி சாரணர் மற்றும் ஜனாதிபதி சாரணருக்கான வருடாந்த பொதுக்கூட்டம்


***எதிர்வரும் 10.08.2013 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ராணி சாரணர் மற்றும் ஜனாதிபதி சாரணருக்கான வருடாந்த பொதுக்கூட்டம் கண்டியில் நடைபெறவுள்ளது. இதில் கலந்துகொள்ள விரும்பும் ராணி சாரணர் மற்றும் ஜனாதிபதி சாரணர்கள் கழகத்தின் செயலாளர் சம்பத் விஜேசிங்க -077557305 என்ற எண்ணுடன் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.***

## போத்தலில் கோப்பை



வெற்றுப் ப்ளாஸ்டிக் போத்தலொன்றில் கோப்பையொன்றையோ அல்லது புனல் ஒன்றையோ இவ்வாறு அமைப்போம்.

## சாதாரண முடிச்சு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆழ்கடலை ஆய்வுசெய்யக்கூடிய சொகுசு லிமோசின் நீர்மூழ்கி

# C-Explorer 5

இதுவரை பாவனையிலிருந்த ஆழ்கடலை ஆய்வுசெய்யும் நீர்மூழ்கிகளைவிட, பல்வேறு வசதிகள் நிறைந்த சொகுசு நீர்மூழ்கி ஒன்றினை நெதர்லாந்தின் U-Boat Worx நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் அதிசொகுசு வசதிகள் காரணமாகவே இதனை 'லிமோசின் நீர்மூழ்கி' என அழைக்கின்றனர்.




மூழ்கக்கூடிய ஆழத்தின் அளவு
**300m**

பயணிக்கக்கூடிய உச்ச வேகம் கடல் மைல்களில்
**03knots**

நீருக்கடியில் இருக்கக் கூடிய மணித்தியாலங்கள் **08**
(இதனை 16 மணித்தியாலங்களாக அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது)

நீர்மூழ்கியின் பெறுமதியானது, அமெரிக்க டொலரில்
**2.4 million**

இதன் சொகுசு வசதிகள்
- குளிரூட்டப்பட்டுள்ளது.
- முப்பரிமாண கெமரா.
- தோலினால் தயாரிக்கப்பட்ட ஆசனம்.
- ஷெம்பேன் குளிரூட்டி.
- ஐபொட் பிளேயர்.

**43.2 kWh**
நீர்மூழ்கியில் பொருத்தப்பட்டுள்ள லித்தியம் இரும்பு மின்கலம் மூலம் மூழ்கியபடி இருப்பதற்குரிய சக்தியைப் பெற்றுக் கொடுக்கின்றது.

**360°**
நீர்மூழ்கியில் பயணிக்கும் பயணிகளுக்கு முழுப் பிரதேசமும் 360 பாகைக் காட்சிகளாகப் பார்க்க முடியும்.



நீர் மூழ்கியின் முன்புறம் காட்சியளிக்கும் விதம்.

**2Kw**

ஒட்டுநருடன் பயணிக்கக் கூடிய பயணிகளின்தொகை **05**



நீர் மூழ்கியின் பின்பகுதி காட்சியளிக்கும் விதம்.

C-Explorer 5க்கு மேலதிகமாக பல்வேறு நிறுவனங்கள்மூலம் முன்வைக்கப்பட்டுள்ள ஆழ்கடல் மேற்பார்வை நீர்மூழ்கிகள் பல.

DeepFlight Super Falcon



Hawkes Ocean Technologies
விலை - 17 மில்லியன் டொலர்
ஆழம் - 1000 அடி
பயணிகள் - 02
நேரம் - 24 மணித்தியாலம்

Ocean Pearl



SEAmagine
விலை - 2.5 மில்லியன் டொலர்
ஆழம் - 3,000 அடி
பயணிகள் - 02
நேரம் - 06 மணித்தியாலம்.

Triton 36,000/3



Triton Submarines
விலை - 15 மில்லியன் டொலர்
ஆழம் - 36,000 அடி
பயணிகள் - 03
நேரம் - 16 மணித்தியாலம்.

மில்லியன் டொலர் (இது 2011 ஆம் ஆண்டு நிலவிய விலைமதிப்பீடு)

இரஞ்சித் ஜெயகர்

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, ஒகஸ்ட் மாதம் 07 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday August 07, 2013.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org